


31ஆவது ஆண்டில்
# விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com




நதி: 31 பாலம்: 01 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் JANUARY 01, 2021

## இன்னும் சிறிது காலம் பொறுமையைக் கடைப்பிடிக்கவும்!

ஒன்றாறியோ மாகாண மக்களை இன்னும் சிறிது காலம் பொறுமையைக் கடை பிடித்துத் தொடர்ந்து கோவிட்-19 தொற்று நோய்ப் பரவலுக்கு எதிரான சாதாரண சுகாதார முறைகளைக் கைக்கொண்டு அநாவசியப் பிரயாணங்களைத் தவிர்க்கு மாறு ஊடகவியலாளர் மாநாட்டில் ஒன்றாறியோ முதல்வர் Doug Ford மென்மையான குரலில் மிகவும் மன்றாட்டமாகக் கேட்டுள்ளார்.

மக்கள், கோவிட் செய்திகளால் சலிப் படைந்து விட்டனர் என்று எனக்கு நன்றாகத் தெரியும் என்றும், தற்போது தடுப்பூசி போடும் வேலை ஆரம்பிக்கப்பட் டுள்ளது, நாம் விரைவில் பொருளா தாரத்தை வளப்படுத்தி ஒன்றாறியோ மாகாணத்தை மேம்படுத்துவோம் என்றும் ஒன்றாறியோ முதல்வர் தெரிவித்தார்.

இவ்வேளையில் ஒன்றாறியோ மாகாண சுகாதார சேவை அதிகாரிகள், இங்கிலாந்தில் தற்போது பரவிவரும் கொரோனா வைரஸின் திரிபடைந்த வடிவமான புதிய கொரோனா வைரஸ் தொற்று கனடாவிலும் ஏற்பட்டுள்ளது என்று 2020 டிசம்பர் 26இல் அறிவித்துள்ளனர். இப்புதிய திரிபடைந்த கொரோனா வைரசுக்கு B.1.1.7 திரிபு கொரோனா வைரஸ் எனப் பெயரிடப்பட்டுள்ளது.

ரொறொன்ரோவிற்கு கிழக்குப் பகுதியில் உள்ள Durham பிரதேசத்தில் வாழும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவருக்கு இந்தப் புதிய கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டிருப்பது கண்டறியப்பட் டுள்ளது. ஒன்றாறியோ மாகாண சுகாதார சேவையின் முதன்மை மருத்துவ அதிகாரிகளில் ஒருவரான வைத்தியர் Barbara Yaffe ஊடகங்களுக்குத் தெரிவிக் கையில், புதிய கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ள கணவன் மனைவி இருவரும் Durham பிரதேசத்தைச் சேர்ந்த வர்கள், அண்மையில் வெளிநாட்டுப் பிரயாணங்களை மேற்கொள்ளாதவர்கள், நாம் அறிந்தவரையில் இவர்கள் எந்த ஒரு கோவிட்-19 தொற்று நோய் அறிகுறிகள் உள்ளவர்களுடன் நெருங்கிப் பழகாதோர் என்றும் கூறினார். பின்னர் இவர்கள் இங்கிலாந்தில் இருந்து வந்தவர்களுடன் தொடர்புகொண்டிருந்தது கண்டு பிடிக்கப்பட்டது. டிசம்பர் 28இல் இங்கிலாந்தில் இருந்து அண்மையில் ஒட்டாவாவிற்கு வந்தவருக்கும், வன்கூவர் தீவில் ஒருவருக்கும், டிசம்பர் 29இல் அல்பேட்டாவில் ஒருவருக்கும், குவிபெக்கில் ஒருவருக்குமாக கனடாவில் மொத்தமாக அறுவருக்கு இப்புதிய கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளது உ றுதிஙசெய்யப்பட்டுள்ளது.

ஏற்கனவே ஒன்றாறியோ மாகாண அரசு 2020 டிசம்பர் 26 அதிகாலை 12:01



மணியில் இருந்து மாகாணம் தழுவிய முடக்கநிலையை அறிவித்துள்ளது. இந்த முடக்கநிலை ஒன்றாறியோவின் தென் பகுதிக்கு (27 சுகாதாரப் பிராந்தியங்கள்) 2021 ஜனவரி 23வரை அமலில் இருக்கும். இந்த முடக்கநிலை ஒன்றாறியோவின் வடபகுதிக்கு (7 சுகாதார பிராந்தியங்கள்) 2021 ஜனவரி 09வரை அமலில் இருக்கும்.

இந்த மாகாணம் தழுவிய முடக்க நிலையைச் சுட்டிக்காட்டிய வைத்தியர் Barbara Yaffe இந்தப் புதிய கொரோனா வைரஸ் தொற்று, ஒன்றாறியோ மாகாண மக்கள் முடிந்தவரை வீட்டிலேயே இருக்க வேண்டியதன் அவசியத்தை மேலும் வலுப்படுத்துகிறது. இதனால் டிசம்பர் 26ஆம் திகதியில் இருந்து அமலுக்கு வரும் முடக்க நிலையை அனுசரித்து நடப்பதுடன் அனைத்து பொதுச் சுகாதார ஆலோசனைகளையும் தொடர்ந்து பின்பற்ற வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

கனடா 2020 மார்ச் மாதத்தில் இருந்தே




வெளிநாட்டுப் பிரயாணங்களுக்கு வலுவான பயணக் கட்டுப்பாடுகளையும் மற்றும் எல்லையில் தடுப்பு நடவடிக்கை களையும் விதித்திருந்தது. ஆனாலும் அத்தியாவசியத் தேவைகளுக்காகக் கனடாவிற்கு வருவோர் கனடாவுக்குள் நுழைந்தவுடன் 14 நாட்கள் கட்டாயம் தனிமைப்படுத்த வேண்டும் என்ற நிபந்தனையுடன் அனுமதித்திருந்தது. பின்னர் இங்கிலாந்தில் கொரோனா வைரஸின் திரிபடைந்த வடிவமான புதிய கொரோனா வைரஸ் தொற்று பரவத் தொடங்கியதால் டிசம்பர் 21 அதிகாலை 12:01 மணியிலிருந்து 72 மணித்தியாலங் களுக்கு இங்கிலாந்திற்கான எல்லாப் பிரயாணிகளுக்கான விமான சேவைகளை யும் நிறுத்தியது. கனடிய அரசு பின்னர் இந்த 72 மணித்தியாலத் தடையை 2021 ஜனவரி 6 வரை நீடித்துள்ளது. ஆனால் இங்கிலாந்துக்கான சரக்கு விமானச் சேவைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

இங்கிலாந்தில் புதிய கொரோனா வைரஸ் தொற்று 2020 செப்ரெம்பர் 21இல் Kent கவுன்ரியில் கண்டுபிடிக்கப்பட்டிருந்தது. இதன் பரவல் நொவம்பர் மாதத்தில் தான் தொடங்கியது. இதனால் புதிய வைரஸின் பரவல் பிரயாணத்தின் மூலம் கனடாவுக் குள் வருவது எதிர்பார்க்கப்பட்டதே என ஒன்றாறியோ மாகாண சுகாதார சேவை அதிகாரி ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

இங்கிலாந்திற்கான பயணிகள் விமானத் தடை அமலுக்கு வந்த டிசம்பர் 21ஆம் திகதிக்கு முந்திய 7 நாட்களில் லண்டன், இங்கிலாந்தில் இருந்து நேரடிப் பயணிகள்

(தொடர்ச்சி 03ஆம் பக்கம்...)


























# நற்பலனை மிகுத்தும் நவகிரக ஆலயங்கள்–தமிழ்நாடு



செல்வராஜ், டெல்லி
www.tamilcartrip.com
WhatsApp: +91.986.816.5715

மகத்துவம் வாய்ந்த நவகிரக நாயகர்களான சூரியன், சந்திரன் மற்றும் சுக்ரனின் சிறப்பையும் அவை அமைந்துள்ள இடங்களைப் பற்றிய விவரங்களையும் கடந்த இதழில் படித்தோம். அதன் தொடர்ச்சியை இந்த இதழில் காணலாம்




1. செவ்வாய் தலம் (வைத்தீஸ்வரர்) : சீர்காழிக்கு அருகில் காவிரி நதியின் வடகரையில் அமைந்துள்ளது. சிவபெருமானின் நெற்றிக் கண்ணிலிருந்து விழுந்த நீர்த்துளியில் இருந்து தோன்றியவர்தான் செவ்வாய் என்று புராணங்கள் கூறுகின்றன. இத்தலத்திற்குச் சென்று நீராடி செவ்வாய் பகவானுக்கு செந்நிற வஸ்திரம் சாத்தி செண்பக மலரால் அர்ச்சனை செய்து வழிபடுவதன் மூலம் செவ்வாய் கிரகத்தால் ஏற்பட்டிருக்கும் தோஷங்கள் அனைத்தும் விலகும் என்பது நம்பிக்கை.

2. திருவெண்காடு புதன் கோவில் (ஸ்ரீ சுவேதாரண்யேசுவரர்): இந்த ஆலயம் சீர்காழி-மயிலாடுதுறை சாலையில் காவிரியின் வடகரையில் அமைந்துள்ளது. புதன் சகலகலைகளிலும் வல்லவர் மற்றும் ஞானியாவார். இங்கு புதனுக்குத் தனிக் கோயில் உள்ளது. பச்சைப்பயறும் வெல்லமும் சேர்த்த பாயாசத்தை நைவேத்தியம் செய்து வழிபட்டால் புதன் கிரகத்தால் ஏற்பட்டிருக்கும் தோஷங்கள் அனைத்தும் விலகும். இந்த ஆலயம் 51 சக்தி பீடங்களில் ஒன்றாகவும் கருதப்படுகின்றது. சிவபெருமானின் 64 அவதாரங்களில் ஒன்றான அகோரி அவதார அகோராஸ்திர மூர்த்தியை இந்த ஆலயத்தில் மட்டுமே காணலாம்.

3. ஆலங்குடி குரு பகவான் கோயில் (ஸ்ரீ ஆபத்சகாயேஸ்வரர்) : இந்த ஆலயம் கும்பகோணத்திற்கு அருகில் காவிரி நதியின் தென் கரையில் அமைந்துள்ளது. குரு பார்க்கக் கோடி தோஷம் விலகும் என்பர். தேவர்களின் குருவாகவும், இந்திரனுக்கு அமைச்சராகவும் திகழும் குரு பகவானை தரிசிப்பதன் மூலம் எந்த ஒரு கிரகத்தின் தோஷத்தையும் தமது பார்வையின் வலிமையால் நீக்குவார் குருபகவான்.

4. திருநள்ளாறு சனீஸ்வரன் கோவில் (ஸ்ரீ தர்ப்பாரண்யேஸ்வரர்). இந்த ஆலயம் கும்பகோணம்-காரைக்கால் நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது. இங்கு சனீஸ்வரனுக்குத் தனி சன்னதி உள்ளது. இங்கு வேறு கிரகங்களுக்கு ஆலயம் இல்லை என்பது தனிச் சிறப்பாகும். சனீஸ்வர பகவானுக்கு கறுப்பு நிற வஸ்திரம் சாத்தி மற்றும் கறுப்பு எள்ளு சாதத்தை நைவேத்தியம் செய்து வழிபட்டால் சனீஸ்வரனால் ஏற்படக்கூடிய துன்பங்கள் அனைத்தும் விலகும் என்பது நம்பிக்கை. இங்குள்ள மரகத லிங்கத்தை அவசியம் தரிசிக்க வேண்டும்.







5. திருநாகேஸ்வரம் ராகு கோவில் (ஸ்ரீ நாகநாத சுவாமி): முதல் ஏழு கிரகங்களுக்கு எதிர் திசையில் நிழல் கிரகமான ராகு சுற்றி வருவதால் இது மிகவும் பலம் பொருந்தியதாகும். ராகு கிரகம் யோகத்திற்கு அதிபதி. பொதுவாக ராகு பகவான் மனித தலை மற்றும் நாக உடலுடன் காட்சி தருவார். ஆனால் இங்கு மட்டும் மனித வடிவில் காட்சி தருகிறார் என்பது அபூர்வம்.

6. கீழப்பெரும்பள்ளம் கேது பகவான் கோவில் (ஸ்ரீ நாகநாதர்): இந்த ஆலயம் மயிலாடுதுறை-பூம்புகார் நெடுஞ்சாலையில் காவிரி நதிக்கு வலப்புறம் அமைந்துள்ளது. வறுமை நீக்கி வளமை சேர்க்கும் நாகநாதரை வழிபடுவதனால் நன்மையே உண்டாகும் என்றும் மேலும் முன்வினைகளின்படி வரவேண்டிய சோதனைகள் முழுவதும் நீங்கும் என்பது நம்பிக்கை. கேது பகவான் உடல் தெய்வ வடிவிலும் மற்றும் தலை ஐந்து தலை நாக


(தொடர்ச்சி 07ஆம் பக்கம்...)

# இன்னும்...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

விமான சேவைகள் 10 ரொறொன்ரோ விற்கும், 4 மொன்றியலுக்கும், 2 வன்கூவருக்கும் வந்தன என CBC ஊடகம் தெரிவித்துள்ளது.

ஹமில்ரனிலுள்ள McMaster பல்கலைக் கழகத்தின் தொற்று நோய் மருத்துவரும் மருத்துவ இணைப் பேராசிரியருமான வைத்தியர் Zain Chagla, CBC ஊடகத்திற்கு அளித்த பேட்டியில் முந்திய கொரோனா வைரஸ் நோய் தடுப்பு முறைகள் எல்லாமே புதிய கொரோனா வைரஸ் பரவலைத் தடுக்கக் கூடிய முறைகள் ஆகும். இதனால் இத்தடுப்பு முறைகளையும் சுகாதார அதிகாரிகளின் அறிவிப்புக்களையும் மக்கள் முன்பை விட 100 மடங்கு அதீத மாகக் கடைப்பிடிக்க வேண்டும். ஏனெனில் இப்புதிய கொரோனா வைரஸ் மிகவும் விரைவாக தொற்றக் கூடியது என்றார்.



எல்லா வைரஸ்களும் தொடர்ந்து திரிபடைந்து கொண்டு இருப்பவைதான். அத்துடன் கொரோனா வைரஸ் ஏற்கனவே பலமுறை திரிபடைந்துள்ளது. இங்கிலாந்தில் உள்ள Cambridge பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த வைரஸ் தொடர்பாக பல ஆய்வுகளை நடத்தும் வைத்தியர் Ravi Gupta சுவீடனில் உள்ள ஆய்வாளர்கள் 2020 ஏப்ரலில் கொரோனா வைரஸிலிருந்து திரிபு அடைந்த இன்னொரு வகையான கொரோனா வைரஸைக் கண்டுபிடித்தனர் என்று கூறினார். ஆனால் அவை முந்திய கொரோனா வைரஸைவிட இரண்டு மடங்கு விரைவாகத் தொற்றக் கூடியது. தற்போது இங்கிலாந்தில் பரவி வரும் திரிபடைந்த புதிய வைரஸ் முந்திய கொரோனா வைரஸைவிட 70 மடங்கு மிக விரைவாகத் தொற்றக் கூடியது என்றார்.

இங்கிலாந்தில் பரவிவரும் திரிபடைந்த புதிய கொரோனா வைரஸ் 70 மடங்கு விரைவாகத் தொற்றக் கூடியது என்றாலும் அது நோயின் தீவிரத்தை அதிகரிக்கிறது என எந்த ஓர் ஆய்வும் வெளிக்காட்டவில்லை என இங்கிலாந்தில் இதுவரை செய்யப்பட்ட ஆய்வுகளைச் சுட்டிக்காட்டி உலக சுகாதார அமைப்பு (WHO) 2020 டிசம்பர் 21இல் அறிக்கை வெளியிட்டுள்ளது.

கனடாவில் கோவிட்-19 தொற்றுநோயைத் தடுக்க ஏற்கனவே Pfizer-BioNTech இனுடையதும் Modernaஇனுடையதுமான தடுப்பூசிகள் பாவனைக்காக அனுமதிக்கப் பட்டுள்ளன. இந்த இரண்டு தடுப்பூசிகள் உட்பட தற்போது ஆய்வில் உள்ள ஏனைய தடுப்பூசிகளும் கொரோனா வைரஸின் திரிபான புதிய கொரோனா வைரஸ் தொற்றைத் தடுக்கக்கூடியவை என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

திரிபடைந்து உருவாகும் புதிய வைரஸ்கள் மிகவும் சிறிய மாற்றத்தையே தமக்குள் செய்வதால் அப்புதிய வைரஸ்களின் தொற்றையும் தாம் தயாரித்துள்ள தடுப்பூசி தடுக்கக் கூடியது என ஜேர்மன் நாட்டின் BioNTech நிறுவனத்தின் பிரதம நிர்வாகியான Ugur Sahin டிசம்பர் 27இல் ஊடகங்களுக்குத் தெரிவித்தார். இது தொடர்பாகத் தாங்கள் தற்போது ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறோம். இன்னும் இரண்டு கிழமைகளில் இது தொடர்பான உறுதிப்படுத்துதலைத் தம்மால் வெளியிட முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

தாங்கள் தயாரிக்கும் தடுப்பூசி மருந்தில் 1,270 வகையான அமினோ அமிலங்கள் உள்ளன. இவற்றில் 9 வகையான அமினோ அமிலங்கள்தான் புதிய திரிபடைந்த கொரோனா வைரஸில் மாறியிருக்கின்றன. இதனால் புதிய கொரோனா வைரஸ் 99% முந்திய கொரோனா வைரஸை ஒத்திருக்கிறது என்றார்.

Ugur Sahin மேலும் தெரிவிக்கையில், தாங்கள் இப்போது தடுப்பூசி மருந்துகளை mRNA தொழில்நுட்பம் மூலம் தயாரிப்பதால் தேவை ஏற்படின் புதிய மருந்தைத் தயாரிக்க விரைவில் தொழில்நுட்பத்தை மாற்றியமைக்கலாம். புதிய கொரோனா வைரஸின் திரிபடைந்த புதிய புரதங்களுக்கு என ஒரு புதிய தடுப்பூசி மருந்து தயாரிக்கத் தங்களுக்கு 6 கிழமைகள் மட்டுமே எடுக்கும். ஆனால் வழமையான முறையில் தடுப்பு மருந்து தயாரிக்கப் பல மாதங்கள் செல்லும் என்றார்.

புதிய அமெரிக்க அதிபராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள Joe Biden நியமிக்க உள்ள Surgeon Generalஆன Vivek Murthy, NBC ஊடகத்திற்குத் தெரிவிக்கையில் “அமெரிக்காவில் தயாரிக்கப்படும் இரண்டு முன்னணி தடுப்பூசிகளான Pfizer-BioNTechஉம் Modernaஉம் mRNA தொழில்நுட்பத்தில் தயாரிக்கப்படுபவை. இவை கொரோனா வைரஸின் முள் போன்ற பகுதியின் புரத வகைகளைத் தாக்குபவை. இதனால் இத்தடுப்பு மருந்துகள் எவ்வகைத் திரிபடைந்த கொரோனா வைரஸையும் எதிர்க்கக் கூடியவை” என்றார்.

Halifaxஇல் உள்ள Dalhousie பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த நுண்ணுயிரியல் வல்லுனரான Nikhil Thomas, CBC ஊடகத்துக்குத் தெரிவிக்கையில் “mRNA தொழில்நுட்பத்தில் தயாரிக்கப்படும் தடுப்பு மருந்துகள் எல்லாம் தேவை ஏற்படின் இலகுவில் மாற்றி அமைக்கக்கூடியவை” என்றார்.

இப்புதிய கொரோனா வைரஸானது அவுஸ்திரேலியா, பெல்ஜியம், டென்மார்க், நெதர்லாந்து மற்றும் இத்தாலி நாடுகளில் பரவியுள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு அரசுகள் தெரிவித்துள்ளன.

“வெளிநாடுகளில் இருந்து கனடாவிற்குள் வருவோரால் ஒன்ராறியோவில் கொரோனா தொற்று நோய்ப் பரவலைக் கட்டுப்படுத்துவது கடினமாக உள்ளது. இவ்வாறு வருவோர் 14 நாட்கள் தனிமைப்படுத்தலில் கட்டாயமாக இருக்கவேண்டும் என அறிவுறுத்தப்படுகின்றனர். ஆனால் அவர்களில் 25% ஆனோர் அவ்வாறு செய்வதில்லை. கனடிய அரசு எல்லைகளுக்கு ஊடாக வருவோருக்கு நாட்டில் நுழையும் முன்னர் கோவிட்-19 தொற்று நோய் இருக்கிறதா என்று பரிசோதனை செய்ய வேண்டும். கனடிய மத்திய அரசு உடனடியாக இப்பரிசோதனைகளை விமான நிலையங்களில் அமல்படுத்த வேண்டும்” என மிகவும் கடுமையான தொனியில் ஒன்ராறியோ மாகாண முதல்வர் Doug Ford கனடிய மத்திய அரசை வலியுறுத்திக் கேட்டுள்ளார்.



டிசம்பர் 29ஆம் திகதி CTV ஊடகத்தின் தகவல்படி இதுவரை 242,000 Pfizer-BioNTech தடுப்பூசி மருந்தும் 168,700 Moderna தடுப்பூசி மருந்தும் கனடாவிற்குத் தருவிக்கப்பட்டுள்ளன.

இதுவரை ஒன்ராறியோ மாகாணத்திற்கு 90,000 Pfizer-BioNTech தடுப்பூசி மருந்துகள் அனுப்பப்பட்டுள்ளன. டிசம்பர் 28ஆம் திகதி மாலைவரை ஒன்ராறியோ மாகாணத்தில் 13,200பேருக்கு மட்டுமே தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

ஒன்ராறியோ மாகாணத்தில் பெரும்பாலான தடுப்பூசி வழங்கும் இடங்கள் டிசம்பர் 24 காலையுடன் மூடப்பட்டன. டிசம்பர் 25 & 26ஆம் திகதியில் எல்லாத் தடுப்பூசி வழங்கும் இடங்களும் மூடப்பட்டு இருந்தன. மீண்டும் ஒருசில தடுப்பூசி வழங்கும் இடங்கள் மட்டுமே டிசம்பர் 26, 27ஆம் திகதியில் திறந்திருந்தன. டிசம்பர் 28ஆம் திகதியில் இருந்துதான் மீண்டும் எல்லாத்தடுப்பூசி வழங்கும் இடங்கள் ஒன்ராறியோவில் திறக்கப்பட்டன.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த ஒன்ராறியோ மாகாண எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வைரஸ் வார இறுதி விடுமுறையிலோ அல்லது விடுமுறை நாட்களிலோ பரவாமல் நிற்பது இல்லை எனக்கூறி ஒன்ராறியோ மாகாண அரசின் மீது கண்டனத்தைத் தெரிவித்துள்ளார். ஒன்ராறியோ எதிர்க்கட்சித் தலைவரும் ஒன்ராறியோ புதிய ஜனநாயகக் கட்சித் தலைவியுமான Andrea Horwath வார இறுதி மற்றும் விடுமுறை நாட்களில் அரசு தடுப்பூசி போடுவதை நிறுத்தியது மிகவும்

(தொடர்ச்சி 07ஆம் பக்கம்...)

MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC
• கழுத்து, • முதுகு நோவு • வாகன விபத்து • மன அழுத்தம் • விளையாட்டுக் காயங்கள் • தலையிடி, தலைவருத்தம்
போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்

Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.
WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:
• STRESS • SKIN PROBLEM • RESPIRATORY PROBLEMS • DIGESTIVE PROBLEMS • VARICOSE VEINS • BACK PROBLEM /NECK PROBLEM
• TENNIS ELBOW PROBLEM • TREAT WITH MASSAGE THERAP • ALLERGIES • SEXUAL PROBLEMS • SEXUAL PROBLEMS • CHOLESTEROL • TUMOR • FOOT PROBLEM
HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING
Cough, Flu, Depression, Anxiety, Asthma, Tonsillitis
Gout, Arthritis, P.M.S, Leucorrhea, Migraines, Hair Loss
Diabetes, Cystitis, Cancer, Prostatitis, Obesity, Hemorrhoids
Stomatitis, Colitis
Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER
TEL: 416-298-7537/416-291-3022
5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# நாமும் நமது இல்லமும் 574




## ரொறொன்ரோ பெரும்பாகத்தின் ஆதனச் சந்தையின் புள்ளிவிபரம்




பிறந்துள்ள புதுவருடம் இனிமையானதாகவும் ஆரோக்கியமானதாகவும் சகல வளங்களும் பெற்று வாழ இறைவன் அருள் புரிவாராக.

2020ஆம் ஆண்டு அமைதியாக ஆரம்பித்து மாதங்கள் இரண்டு முடிந்து மூன்றாவதன் மத்தியில் கோவிட்-19இன் பாதிப்பு ஆரம்பித்தது. இதன் பாதிப்பினால் மக்கள் வீட்டிற்குள் முடக்கப்பட்டனர். சகல வியாபாரங்களும் பெருமளவில் பாதிக்கப்பட்டன. இதற்கு ஆதன வியாபாரமும் விதிவிலக்காகவில்லை. பழைய அனுபவங்களில் பாடம் கண்ட அரசுகள் அதற்கேற்ப தம்மைத் தயார் படுத்தின. வட்டி வீதத்தை அடி மட்டத்திற்குக் கொண்டுவந்து மக்களின் தேவைகளைக் கருதி அவர்களின் வாழ்க்கைக்குத் தேவையான உதவிகளைச் செய்வதற்கு முன்வந்தன.

பல வியாபாரங்கள் இக்கட்டான நிலையில் தொடர்ந்து இருக்க ஆதன வியாபாரம் மட்டும் மெல்ல மெல்லத் துளிர்விடத் தொடங்கியது. எனினும் இதற்கு மாறாக அடுக்குமாடி மனைகளில் வாடகைக்கு இருந்தோர் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பத் தொடங்கினர். அனேகமான அலுவலகங்கள் மூடத் தொடங்கின. அலுவலகங்கள் தொழிலாளர்களை வீட்டிலிருந்தே தொழில் புரியக் கேட்டுக் கொள்ளப்பட்டனர். இதனால் குறிப்பாக அடுக்குமாடிக் கட்டிடங்களிலிருந்த மனைகள் வெறிச்சோடத் தொடங்கின. வாடகையின் பெறுமதியும் இறங்கத் தொடங்கியது. குறிப்பாக ரொறொன்ரோப் பெரும்பாகத்திலுள்ள அடுக்குமாடிகளில் உள்ள மனைகளின் வாடகையின் மாதாந்தக் கொடுப்பனவு 20% குறைந்துள்ளது.

அண்மையில் கிடைத்த தகவலின்படி வாடகைக்குச் சந்தைக்குக் கொண்டு வரப்பட்ட அநேகமான அடுக்குமாடி மனைகள் 3 மாதங்களுக்கு மேலாக வாடகைக்குக் கொடுக்கப்படாமல் வெற்றடமாக இருக்கிறது. இதன் உரிமையாளர்கள் வாடகையின் பெறுமதியைக் குறைத்து வருவதைக் காணலாம். வாடகை நிலைமை இவ்வாறிருக்க அடுக்குமாடி மனைகள் தவிர்ந்த மற்றைய வாடகை ஆதனங்களின் விலை அதிகரிக்கத் தொடங்கியது.

**ரொறொன்ரோ பெரும்பாகத்தின் ஆதனச் சந்தையின் புள்ளிவிபரம்**

| ஆண்டு | விற்கப்பட்ட ஆதனங்கள் | சராசரி ஆதனவிலை |
|---|---|---|
| 2008 | 74,505 | $379,080 |
| 2009 | 86,980 | $395,234 |
| 2010 | 85,860 | $431,262 |
| 2011 | 89,110 | $464,989 |
| 2012 | 85,488 | $497,073 |
| 2013 | 87,047 | $522,951 |
| 2014 | 92,776 | $566,611 |
| 2015 | 101,214 | $622,116 |
| 2016 | 113,040 | $729,821 |
| 2017 | 92,340 | $822,496 |
| 2018 | 78,018 | $787,845 |
| 2019 | 87,753 | $819,288 |
| 2020 | 95,000* | $930,000* |

* Estimated Values

2019ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது ஏப்ரல் 2020ஐத் தவிர ஒவ்வொரு மாதமும் தொடர்ந்து விலை அதிகரித்தே வந்துள்ளது. குறிப்பாக ரொறொன்ரோப் பெரும்பாகத்திலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் விலை மேலும் அதிகரித்துள்ளது. ஆனால் 2020 ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் விற்பனை சடுதியாக இறக்கம் அடைந்தபோதிலும், வட்டி வீத இறக்கத்தினால் விலையில் இறக்கம் ஏற்படவில்லை.

மேலுள்ள ஆதனத் தகவல்களின்படி விலை தொடர்ச்சியாக அதிகரித்து வருவதையே காணலாம். இதன் தொடர்ச்சியை எதிர்காலத்திலும் எதிர்பார்க்கலாம். வட்டி வீதம் 2021, 2022ஆம் ஆண்டுகளில் அதிகரிக்கக் கூடிய சந்தர்ப்பங்கள் மிகக் குறைவாகவே காணப்படுகிறது. கொரோனாவின் இரண்டாவது அலையின் பாதிப்பில் இருந்து வெளியேற முன்பே புதிய வைரஸின் தாக்கம் கனடாவிலும் தொடரலாமா? என்ற யோசனையில் மக்கள் உள்ளனர் அவ்வாறு ஒரு நிலைமை தொடருமா? தடுப்பூசி பற்றிய எதிர்மறையான கருத்துக்கள் பொதுவாக இல்லாமல் இருப்பதால், 2021இன் இரண்டாவது கால்பகுதியில் நாட்டின் நிலைமை வழமைக்குத் திரும்பலாம் என எதிர்பார்க்கலாம். ஆதன வியாபாரத்துடன் மக்கள் வாழ்வும் சிறப்புறும் என நல்லதாகவே நினைப்போம்.






## இனிய உழவர் திருநாள் நல்வாழ்த்து

திருவள்ளுவர் அருளிய - குறள் - குடிமை
(959/1330)



நிலத்தில் கிடந்தமை கால்காட்டும் காட்டும்
குலத்தில் பிறந்தார்வாய்ச் சொல்.

நிலத்தின் இயல்பை அதில் விளைந்த பயிர்காட்டும் அதுபோலக் குடும்பத்தின் இயல்பை அதில் பிறந்தவர் பேசும் சொல் காட்டும்.

## எண்திசையதிர எழிலொடு வருவாய்...!




இரண்டாயிரத்து இருபத்தோராம் ஆண்டே
இனிதாக வருவாய் இம்மண்ணுக்கு
திரண்ட திருவெல்லாம் தருவாய்
தீமைகள் யாவும் அகலுமேயிங்கு
வறண்டு கிடந்த வாழ்வினையாவர்க்கும்
வளமாக்கித் தருவாய் கொரோனாவால்
அரண்டு வீழ்ந்த மக்களைக் காத்து
அவனிக்கு அமைதியைத் தருவாய்!

எங்குமே நீக்கமற நிறைந்திங்கு
ஏற்றம் தருவாய் எழில் தருவாய்
பொங்கும் இன்பம் புவனமெங்கும்
பொலிந்து கொட்டட்டும் செல்வம்
தங்கும் அமைதி தரணி எங்கும்
தடைகளகலும் தவிப்புகள் அடங்கும்
கங்குலை விரட்டும் கதிரொளியாக
கடிதென வந்தெமைக் காப்பாய்!

காப்பாய் கொரோனாவின் பிடியிலிருந்து
கல்வியை இழந்து தவிக்கும் மாணவர்
சாப்பா டின்றித்துவளும் மக்கள்
சம்பாத்தியம் இன்றித் துடித்துநாளும்
கூப்பாடு போட்டுக் கும்பிவாடி கொடிய
கூற்றுவன் பிடியில் சிக்கிக்கிடப்போரை
காப்பாய் பெரும் கொடுமைகளினியும்
காசினி தன்னில் அண்டாமல் அருள்வாய்!

செய்வாய் இழந்தவை அனைத்தும்
செகத்துளோர் பெற்றிடச் செய்வாய்
கொய்வாய் மனிதரின் தீய குணங்களை
கொட்டிச் செல்வாய் நலமெலாம்
பொய்வாய் திறந்து யாரும் பேசாமல்
பொலிவுறச் செய்வாய் சத்தியம் தர்மம்
எய்வாய் மனிதர்க்குப் பாசமும் அன்பும்
எண்திசையதிர எழிலொடு வருவாய்!



கவிஞர் புரட்சிபாலன்
வன்கூவர்

# சுற்றுலாப் பயணிகளின் வருகையும், மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள அச்சமும்!

**- விகிர்தன் -**

சுற்றுலாப் பயணிகளுக்காக இலங்கை தற்போது திறந்து விடப்பட்டுள்ளது. கொரோனா தொற்றுப் பரவல் காரணமாக கடந்த மார்ச் மாதம் தொடக்கம் சுற்றுலாத் துறை செயற்படவில்லை. தற்போது கொரோனாவின் இரண்டாவது அலை அடித்துக்கொண்டிருக்கும் நிலையில் சுற்றுலாத்துறை செயற்படத் தொடங்கி இருக்கின்றது.

கடந்த 26ஆம் திகதியிலிருந்து இலங்கை விமான நிலையங்கள் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்காக திறக்கப்படும் என்றும், முதலாவதாக ரஸ்யாவிலிருந்து சுற்றுலாக் குழுவினர் வரவுள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், ரஸ்ய சுற்றுலாப் பயணிகள் தங்கள் பயணத்தை பிற்போட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இப்போது- கடந்த 28, 29ஆம் திகதிகளில் உக்ரைன் நாட்டிலிருந்து இரண்டு குழுக்களாக 389பேர் இலங்கை வந்துள்ளனர். இந்தக் குழுவினரின் சுற்றுலாப் பயணம் சுமுகமாகவிருக்குமானால் தொடர்ந்தும் பல நாடுகளிலிருந்தும் இலங்கைக்கு சுற்றுலாப் பயணிகள் வரக்கூடிய நிலைமை ஏற்படும். ஆனாலும், உக்ரைனிலிருந்து வந்தோரில் மேற்கொள்ளப்பட்ட கொரோனா பரிசோதனைகளின் போது ஆறு பேருக்குக் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அதுவும் அவர்கள் வருகை தந்த அடுத்த நாளே இவ்வாறு அவர்களில் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

தற்போது இலங்கை வந்துள்ள உக்ரைன் நாட்டு சுற்றுலாப் பயணிகள் தனிமைப்படுத்தப்பட்டு, பரிசோதனைகளுக்கு உட்பட்ட நிலையிலேயே உள்ளனர். இன்னும் அவர்கள் நாட்டின் சுற்றுலாப் பகுதிகளுக்கு செல்ல அனுமதிக்கப்படவில்லை. இதேவேளை, அவர்கள் அனைவரும் இலங்கைக்கு வருதற்கு முன்பாக அவர்களின் நாட்டில் தனிமைப்படுத்தப்பட்டு பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டிருப்பர் என்றே நம்பப்பட்டது.

அவ்வாறிருந்தால் இலங்கை வந்தவுடனேயே அவர்களில் அறுவருக்கு கொரோனா தொற்று அடையாளம் காணப்பட்டிருப்பது எவ்வாறு? இதன் மூலம் அவர்கள் முறையாக தங்கள் நாட்டில் தனிமைப்படுத்தலை கடைப்பிடித்து, பரிசோதனைகளின் பின்னர் பயணத்தை மேற்கொள்ளவில்லை என்றே எண்ணத் தோன்றுகின்றது. இது ஒரு ஆபத்தான நிலைதான்.

உலகின் பல நாடுகளில் கொரோனா தொற்றின் இரண்டாவது அலை அதிகளவில் பாதிப்புகளை ஏற்படுத்தி வருகின்றது. அதுமட்டுமன்றி கொரோனா வைரஸ் வேகமான பரவலுக்குரிய புதிய மரபியல் மாற்றத்துடன் செயற்படுவதாக கூறப்படுகின்றது. இங்கிலாந்தில் முதலில் இவ்வகை கொரோனா வைரஸ் இனங்காணப்பட்ட நிலையில் உலகின் பல நாடுகளும் பிரிட்டன் மீதான பயணத் தடையை ஏற்படுத்திக் கொண்டுள்ளன. இந்தப் புதிய வைரஸ் வேகமாகப் பரவக்கூடியது என்று கூறப்படும் நிலையில் அது இப்போதுள்ள கொரோனா சிகிச்சை முறைகளுக்குச் சவாலாக அமையுமா? கொரோனா தடுப்பூசிப் பாவனை



தற்போதே ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் இந்தத் தடுப்பூசிக்கு எதிரானதாக இருக்குமா என்கின்ற கேள்விகளுக்கு முழுமையான விடை தெரியவில்லை. ஏனெனில் இது தொடர்பிலான ஆய்வுகள் இப்போதுதான் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஆய்வுகளின் முடிவுகள் வரும்வரை கட்டுப்பாடுகளை இறுக்கமாக்கும் நடைமுறையைத்தான் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதனைத்தான் பிரிட்டன் தற்போது மேற்கொண்டு வருகின்றது. ஏனைய நாடுகளும் புதிய வைரஸ் பரவலை தடுக்கும் நடவடிக்கையாக இறுக்கமான கட்டுப்பாட்டு விதிமுறைகளை நடைமுறைப்படுத்தியுள்ளன.

இவ்வாறான சூழ்நிலையில், இலங்கை அரசாங்கம் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்காக நாட்டை திறந்து விட்டுள்ளமை சரியானதா என்கின்ற கேள்வி எழுகின்றது.

இலங்கைக்கு வருமானம் தருகின்ற முக்கிய துறையாக சுற்றுலாத் துறை திகழ்கின்றது. தொடர்ந்து நாட்டை மூடி வைப்பதால் நாட்டின் பொருளாதாரம் பெருமளவு சரிவை நோக்கியே செல்லும். கடந்த மார்ச் மாதம் இலங்கை கொரோனா கட்டுப்பாட்டு நடைமுறைகளை கடைப்பிடிக்கத் தொடங்கியது. அதனால், கொரோனா பரவல் மோசமான நிலைக்கு செல்லாமல் தடுக்கப்பட்டது.

இன்னும் இரண்டு அல்லது மூன்று வருடங்கள் கொரோனா சூழலில்தான் வாழவேண்டியிருக்கும் என்று கூறப்படுகின்றது. இந்த நிலையில் கட்டுப்பாடுகளையும் நடைமுறைப்படுத்திக் கொண்டு அதேவேளையில் தொழில்துறைகளையும் முன்னெடுத்துச் செல்ல வேண்டிய அவசியம் உள்ளது.

இதனடிப்படையில்தான் சுற்றுலாத் துறையை மீண்டும் செயற்படுத்த அரசாங்கம் முயன்றுள்ளது இதனையடுத்து வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு அரசாங்கம் அனுமதி வழங்கியது. ஆனால், அதனை தொடர்ந்து நடைமுறைப்படுத்த முடியுமா என்கின்ற சந்தேகம் இப்போது எழுந்துள்ளது.

இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் நாட்டில் தங்கியிருக்கும் காலப் பகுதியில் பொதுமக்களுடன் தொடர்புகளை மேற்கொள்ள இடமளிக்கப்படமாட்டாது என்றும், சுற்றுலாப் பயணிகள் தங்கியிருக்கும் காலப்பகுதியில், அவர்களின் செயற்பாடுகள் குறித்து கண்காணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அரசாங்கம் தெரிவித்துள்ளது. சுகாதாரத் தரப்பின் ஆலோசனைகளைப் பெற்றே சகல நடவடிக்கைகளையும் முன்னெடுப்பதாகவும் அரசாங்கம் கூறுகின்றது.

இருந்த போதிலும் எல்லாம் சரியாக நடைபெறுமா என்பது சந்தேகமே. சில விடயங்களில் மக்களின் எதிர்ப்பையும் எதிர்கொள்ள வேண்டிய நிலை அரசாங்கத்திற்கு ஏற்படலாம். இலங்கையில் சுற்றுலாப் பயணிகள் செல்ல விரும்பும் பிரதேசங்களில் முக்கயமானவை நுவரெலியா போன்ற மலையகப் பகுதிகளே. நுவரெலியாவில் ஏற்கனவே சிலருக்கு கொரோனா தொற்று பரவியுள்ள நிலையில் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் அப்பகுதிகளுக்கு வருவதை அங்கு வாழும் மக்கள் விரும்பவில்லை என்று தெரிகின்றது.

கொரோனாத் தொற்று அதிகம் பாதிப்பை ஏற்படுத்தியுள்ள கொழும்பு உள்ளிட்ட மேல் மாகாணத்தை சேர்ந்தோர் வருவதைக்கூட அவர்கள் விரும்பவில்லை. நுவரெலியாவுக்கு சுற்றுலா பயணங்கள் வருவதைத் தவிர்க்குமாறு, வெளிமாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கு ஏற்கனவே நுவரெலியா மாவட்ட செயலாளர் எம்.பி.ஆர்.புஸ்பகுமார் கோரிக்கை விடுத்திருந்தமையும் இற்கு குறிப்பிடத்தக்கது.

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் அப்பகுதிகளுக்கு வருவதை ஓர் அரசாங்க அதிபராக அவரால் எதிர்க்க முடியாவிட்டாலும் அங்குள்ள பொது மக்கள் மற்றும் அமைப்புகள் எதிர்ப்பு தெரிவிக்கக் கூடும். தற்போது வந்துள்ள சுற்றுலாப் பயணிகளுக்குத் தொற்று கண்டறியப்பட்டு வருகின்ற நிலையில், அவர்களுக்கு எதிர்ப்புகள் வரலாம்.


இது ஒருபுறமிருக்க, 2021ஆம் ஆண்டில் நாட்டில் தற்போதுள்ள கொரோனா கட்டுப்பாடுகளில் சில தளர்வுகளை மேற்கொள்ளவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது. நாட்டிலுள்ள திரையரங்குகளை மீண்டும் திறப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நீண்ட தூர போக்குவரத்துக்களை மேற்கொள்ளவும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. மேலும் பல தளர்வுகள் மேற்கொள்ளப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, சமகாலத்தில் விதிக்கப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் சட்ட விதிகள் பலரால் மீறப்பட்டு வருகின்றன. கொரோனா பரவல் காலகட்டத்தில் சட்ட விரோத நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன. குறிப்பாக போதைப்பொருள் வியாபாரம் அதிகரித்துள்ளது. இவை நாட்டின் பல பிரதேசங்களுக்கும் கொரோனா தொற்று பரவுகின்றமைக்கு காரணமாகின்றன.

உதாரணத்திற்கு, யாழ்ப்பாணத்தில் மருதனார்மடம் சந்தை கொரோனா கொத்தணிக்கு காரணம் போதைப்பொருள் கடத்தலே என்று சந்தேகிக்கப்படுகின்றது. கொழும்பிலிருந்து ஹெரோயின் போதைப் பொருளை யாழ்ப்பாணத்திற்கு கொண்டு வரும் நபர் ஒருவர் மருதனார்மடம் சந்தைப்பகுதியிலுள்ள முச்சக்கர வண்டி சாரதிகளுடன் தொடர்புகளை வைத்திருந்தார் என்றும், அப்பகுதியிலுள்ள வீடுகளில் தங்கியிருந்தார் என்றும் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இதுமட்டுமன்றி இந்தியாவிலிருந்து கேரள கஞ்சா கடத்தப்படுகின்றமை தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. யாழ்ப்பாணம் மற்றும், மன்னார் பகுதிக்கு கடலில் கடத்திவரப்படும் கேரள கஞ்சா நாட்டின் தென்பகுதிகளுக்கு கொண்டு செல்லப்படுகின்றன. இந்த நடவடிக்கைகள் அவ்வப்

(தொடர்ச்சி 07ஆம் பக்கம்...)

CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!
• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE Tel: 416-289-7514

OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7

# யாழ். மாநகரசபையின் புதிய முதல்வர் ஆளுமையை வெளிப்படுத்துவாரா?




யாழ்ப்பாணம் மாநகர சபையில், கடந்த 30ஆம் திகதி மாநகர முதல்வர் தெரிவிற்காக இடம்பெற்ற வாக்களிப்பில் யாழ். மாநகர சபை முதல்வராக சட்டத்தரணி விஸ்லிங்கம் மணிவண்ணன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். தமிழ் தேசிய மக்கள் முன்னணியில் இருந்து மணிவண்ணன் நீக்கப்பட்டுள்ளதாக அக்கட்சியின் தலைமை அறிவித்திருந்த போதும் அவர் சட்டப்படி அக்கட்சியின் உறுப்பினராகவே இருக்கின்றார். அதாவது, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினராகவே அவர் மாநகர முதல்வராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

முன்னாள் மநாகரசபை முதல்வர் இம்மானுவேல் ஆர்னோல்டை விட ஒரு வாக்கு அதிகமாகப் பெற்ற நிலையிலேயே அவர் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார். இதன்மூலம் யாழ்ப்பாணம் மாநகர சபையின் 23ஆவது முதல்வராக சட்டத்தரணி வி. மணிவண்ணன் பதவியேற்றுள்ளார்.

யாழ். மாநகர சபையில் அங்கம் வகிக்கும் 45 உறுப்பினர்களில் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் ஒருவர், மற்றும் அகில இலங்கை தமிழ் காங்கிரசின் மூன்று உறுப்பினர்கள் தெரிவின் போது நடுநிலை வகித்துள்ளனர்.

ஏனைய 41 உறுப்பினர்களில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் 10 உறுப்பினர்களும் ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் 10 உறுப்பினர்கள் உட்பட 21 உறுப்பினர்கள் மணிவண்ணனுக்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர். மணிவண்ணன் தமிழ் தேசிய மக்கள் முன்னணியில் தலைமையால் அதிகம் பழிவாங்கப்பட்டவர் என்கின்ற பார்வை பலருக்கும் உண்டு. மணிவண்ணன் கட்சிக்கு துரோகமிழைத்து விட்டதாக பல்வேறு தடவைகள் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூறி வந்திருக்கின்றார். தான் எவ்வித தவறினையும் செய்யவில்லை என்றும், கட்சித் தலைமை தன்னை பழிவாங்கும் செயலில் ஈடுபட்டதென்றும் மணிவண்ணனும் அவரது தன்னிலை விளக்கத்தை பல சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்தி வந்திருக்கின்றார்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள் பலரும் அக்கட்சிக்குள் இருந்தவாறே மணிவண்ணனுக்கு ஆதரவாகவே உள்ளனர். யாழ். மாநகரசபையில் உறுப்பினர்களாகவுள்ள தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் 10 உறுப்பினர்கள் மணிவண்ணனுக்கு வாக்களித்திருக்கின்றமை இதற்கு நல்ல உதாரணம்.

மணிவண்ணனின் வெற்றி தொடர்பில் கஜேந்திரகுமார் கருத்து வெளியிட்டிருக்கின்றார். ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் உறுப்பினர்கள் 10 பேர் மணிவண்ணனுக்கு ஆதரவாக வாக்களித்துள்ளமை அவர் டக்ளஸின் ஆள் என்பது நிரூபணமாகின்றது என்று அவர் குறிப்பிட்டுள்ளார். மணிவண்ணன் தமிழ் தேசியத்திற்கு எதிராகவும் துரோகிகளின் முகவராகவும் செயற்படுவதாக தாங்கள் அறிந்த காரணத்தினாலேயே அவரை கட்சியிலிருந்து நீக்கியதாகவும் இப்போது இது வெளிப்படையாகத் தெரிய வந்துள்ளதாகவும் அவர் கூறுகின்றார்.



அதேவேளை, தங்கள் கட்சியை சேர்ந்த உறுப்பினர்கள் 10 பேர் மணிவண்ணனுக்கு ஆதரவளித்தமையினால் அவர்களும் துரோகிகள் என்றும், அவர்கள் கட்சியிலிருந்து நீக்கப்படவுள்ளனர் என்றும கஜேந்திரகுமார் தெரிவித்திருக்கின்றார்.

முன்னதாக, கஜேந்திரகுமார் கருத்துத் தெரிவிக்கையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு முன்னாள் யாழ். மாநகர சபை முதல்வரான இம்மானுவேல் ஆர்னோல்டை தவிர்த்து வேறு ஒருவரை நியமித்தால் அதற்கு தங்கள் கட்சி ஆதரவளிக்கும் என்று கூறியிருந்தார். தமிழ் தேசியக் கூட்டமைப்பினரையும் கஜேந்திரகுமார் கட்சியினர் துரோகிகள் என்றே கூறிவருகின்றனர். இந்நிலையில், யாழ். மாநகரசபை தலைமையை அவர்களுக்கு கொடுக்க ஆதரவளிப்பது என்பது எவ்வாறு பொருந்தும்?

இந்த நிலையில், இலங்கை தமிழரசுக் கட்சி ஆனோல்டையே மீண்டும் போட்டியில் நிறுத்தியதன் மூலம், தமிழ் தேசியக் கூட்டமைப்பு யாழ். மாநகரசபை முதல்வர் பதவியை நழுவ விட்டமை தொடர்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்குள்ளும் கடும் வாக்குவாதங்கள் இடம்பெற்ற வண்ணமுள்ளன.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கை தமிழரசுக் கட்சியின் பிரதிப் பொதுச்செயலாளருமான எம்.ஏ.சுமந்திரன் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவிற்கு காட்டமான கடிதம் ஒன்றை எழுதியிருக்கின்றார். 'உங்களுடைய தன்னிச்சையான, ஜனநாயக விரோத, சட்டவிரோத செயற்பாட்டினால் போட்டியின்றி வென்றிருக்க வேண்டிய யாழ். மாநகர சபை முதல்வர் பதவியை நாம் இழந்திருக்கின்றோம்' என சுமந்திரன் அக்கடிதத்தில் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

தமிழ் தேசிய அரசியல் களத்தில் யாழ்.மாநகர சபையின் தலைமை மிக முக்கியமான அடையாளம் எனவும், இடம்பெற்ற தோல்விக்கும், பின்னடைவிற்கும் மாவை சேனாதிராஜாவே பிரதான காரணம் எனவும், சுமந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

யாழ். மாநகர சபையின் வரவு-செலவு திட்ட முன்மொழிவில் இரண்டு தடவை தோல்வியுற்ற காரணத்தால் ஆனோல்ட் பதவி இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் வேறு ஒருவரை வேட்பாளராக நிறுத்துவதே பொருத்தமானது என்பதைதான் எடுத்துக் கூறியும் மீண்டும் ஆனோல்டை வேட்பாளராக நியமித்தமைக்கு மாவை சேனாதிராஜாவே பொறுப்பு என்றும் சுமந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

தமிழரசுக் கட்சித் தலைமைக்குள் ஏற்கனவே விரிசல்கள் இருந்து வந்துள்ளமை தெரிந்ததே. அதாவது, சுமந்திரன் தரப்பிற்கும் மாவை சேனாதிராஜா தரப்பிற்கும் இடையில் நீண்ட காலமாக பிரச்சினைகள் இருந்து வந்துள்ளன. சில காலம் அது வெளித் தெரியாதபடி அமிழ்ந்து போயிருந்தது. தற்போது யாழ். மாநகரசபை தலைமைப் பொறுப்பு கைநழுவிப் போயுள்ளதால் மீண்டும் விரிசல் ஒரு வெடிப்பாக கிளம்பியுள்ளதை சுமந்திரனின் கடிதத்தில் காணமுடிகின்றது.

இதேவேளை, டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி ஏன் மணிவண்ணனுக்கு ஆதரவளித்தது என்பதை பார்ப்போமானால் அக்கட்சியின் ஒரு தந்திரோபாய நடவடிக்கை என்றே இதனை விளங்கிக் கொள்ள முடியும்.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி யாழ். மாநகரசபையின் தலைமையை வெல்ல முடியாது. அதனால், தமிழ் தேசியக் கூட்டமைப்பை தோற்கடிக்க வேண்டும் என்பதில் அக்கட்சி தந்திரோபாயமாக செயற்பட்டிருக்கின்றது. தமிழ் தேசியக் கூட்டமைப்பும் அல்லாத, தமிழ் தேசிய மக்கள் முன்னணியும் அல்லாத ஒருவருக்கு ஆதரவளிக்க வேண்டும் என்பதே அக்கட்சியின் இலக்காக இருந்துள்ளது.

இதன் காரணமாக, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அணியுடன் முரண்பட்டு நிற்கும் மணிவண்ணனுக்கு ஈழமக்கள் ஜனநாயக கட்சி ஆதரவளித்துள்ளது.

இந்த நிலையில், மணிவண்ணனும், அவருக்கு ஆதரவளித்த தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் 10 உறுப்பினர்களும் ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் முகவர்கள் என்று கஜேந்திர குமார் குற்றம் சாட்டுவதை மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

எது எப்படியிருப்பினும், இப்போது யாழ். மாநகரசபையின் முதல்வராகப் பதவி யேற்றுள்ள வி. மணிவண்ணன் யாழ்ப்பாணத்தில் மக்கள் எதிர்பார்க்கும் அபிவிருத்தி நடவடிக்கைகளை நிர்வாகம் செய்வதில் அவரது ஆளுமையை வெளிப்படுத்த வேண்டும். அதனூடாக, அவர் குறித்து முன்வைக்கப்படும் குற்றசாட்டுக்களை கடந்து சென்று மக்களின் மனங்களில் அவரால் இடம்பிடிக்க முடியும்.

## இயற்கை மனித இனத்தை அழித்திடுமா?


### இறைவன் இயற்கை அன்னைக்கு எச்சரித்தமை!

"அண்டமதில் அமீபாமுதல் ஆறறிவு மாந்தர்வரை
ஆற்றுகின்ற செய்கையெலாம் இயற்கைதன்னை அழிப்பனவா?
கொண்டநல்ல கொள்கைவிட்டு கொடுமைகளை ஆற்றிடுமா?
கூர்மையாய் கவனிப்பாய்" என்றியற்கைக் கறிவித்தான்.

**இயற்கை அன்னையின் கணிப்பு**

உலகைப் படைத்த காலம்முதல் அதில்வாழும்
உயிரினங்கள் செயற்பாட்டை உன்னிப்பாய் இயற்கையன்னை
பலவகையில் அனுதினமும் ஆய்ந்தாய்ந்தே அவ்வுயிர்கள்
பாரதிலே வாழ்ந்துவரும் அவசியத்தைக் கணித்திட்டாள்

முழுமையான பலன்தருமா என்றவளும் நீதியொடு
முறையாகத் தேர்வதனைப் பலகாலம் நடத்திவந்து
களையெடுக்குங் காலமந்தோ வந்ததெனச் சிலவினத்தைக்
காத்திடாது அழித்தொழித்து வந்ததெல்லாம் சரித்திரமே!



பல்வைத்திய கலாநிதி
இளமுருகனார் பாரதி

யோக சோதிடம்

கிரகப்பொருத்தம் பார்த்தல் · சுபமுகூர்த்தம் கணித்தல்
சாதகக் குறிப்புக் கணித்தல் · பலன் பார்த்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361

# நற்பலனை...

02ஆம் பக்கத்தொடர்ச்சி

வடிவலும் காட்சித் தருகிறார்.

நவகிரக ஆலயங்கள் அனைத்தும் தஞ்சையில் கும்பகோணத்தைச் சுற்றிலும் அமைந்துள்ளன. ஆகவே அனைத்து நவ கிரகங்களையும் கும்பகோணத்தில் இருந்து சிறப்பு வாகனம் மூலம் சென்று



ஒரு நாளில் தரிசித்து வரலாம்.

# இன்னும்...

03ஆம் பக்கத்தொடர்ச்சி

தவறான செயல் என ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார்.

இதுதொடர்பாக ஊடகங்களுக்கு அறிக்கை விடுத்த ஒன்ராறியோ மாகாண சுகாதார அமைச்சு "ஒன்ராறியோ மாகாண வைத்திய சாலை நிர்வாகமே தங்களால் விடுமுறை காலத்தில் போதியளவு தாதிகளை பணிக்கு அமர்த்த இயலாது என்றும் அவர்களுக்கும் விடுமுறை அவசியம் என்று கேட்டுக் கொண்ட தாலேயே விடுமுறை காலத்தில்



தடுப்பூசி போடப்படவில்லை" எனத் தெரிவித்திருக்கிறது.

# சுற்றுலாப்...

05ஆம் பக்கத்தொடர்ச்சி

போது பிடிபட்டாலும் தொடர்ந்தும் இடம் பெற்றே வருகின்றன. இதனை முழுமை யாக தடுப்பதற்கு பாதுகாப்பு தரப்பினருக்கு இயலாமலுள்ளது. இதே போன்று கொரோனா சட்ட விதிமுறை களையும், கண்காணிப்பு நடவடிக்கை களையும் முழுமையாக நடைமுறைப் படுத்துவதும் கடினமான பணியாகவே இருக்கும்.

கொரோனா தொற்று அடையாளம் காணப் பட்டோர் தொடர்பில் நாளாந்தம் தகவல் கள் வெளிப்படுத்தப்பட்டு வருகின்ற போதும் அதன் எண்ணிக்கை அறிவிக்கப் படுவதிலும் பார்க்க மிக அதிகமான தாகவே இருக்கும். பல சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்படும் எழுமாறான பரி சோதனைகளின் போது பலர் தொற்றாளர் களாக அடையாளம் காணப்பட்டு வருகின்றனர். இதனால் கண்டறியப் படாமல் பலருக்குக் கொரோனா தொற்று இருக்கலாம் என்பது தெளிவாகின்றது.

இவ்வாறானதொரு சூழ்நிலையில்தான் சுற்றுலாப் பயணிகளுக்காக நாடு திறக்கப்பட்டுள்ளது. சில தளர்வுகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

இது தொடர்பில் நூறு வீதம் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதென்பது கடினமானது.

உலகின் பல நாடுகள் கொரோனா பரவல் சற்று தணிந்த போது தளர்வுகளை மேற்கொண்டதும், பின்னர் தொற்று மோசமாக பரவத் தொடங்கியதும், முன்னிருந்ததை விடவும் அதிக கட்டுப்பாடுகளை மேற்கொள்ளவேண்டி வந்ததும் நினைவில் கொள்ள வேண்டியது. இலங்கை போன்ற சிறிய நாடுகளுக்குப் பாதிப்பு மோசமானால்



அதனைக் கட்டுப்படுத்துவதும், நாட்டின் பொருளாதார நிலையை கையாள்வதும் கடினமானதாகவே இருக்கும்.

எனவே, சுற்றுலாப் பயணிகள் விடயத்தில் அரசாங்கம் மிக அவதானமாக முடிவெடுத்து செயற்பட வேண்டும்.

## கவனிக்க ஏழு விடயங்கள்

1) கவனி உன் வார்த்தைகளை
2) கவனி உன் செயல்களை
3) கவனி உன் எண்ணங்களை
4) கவனி உன் நடத்தையை
5) கவனி உன் இதயத்தை
6) கவனி உன் முதுகை
7) கவனி உன் வாழ்க்கையை





# வடலியடைப்பு ஒன்றியம், கனடா - 21 ஆவது ஆண்டு விழா



அருந்ததி. ஞா

வடலியடைப்பு ஒன்றியம் கனடாவின் 21ஆவது ஆண்டு விழா 2020 டிசம்பர் 25 காலை 11மணிக்கு (கனடா EST நேரம்) மெய்நிகர் ஒளிபரப்பாக ZOOMஇல் ஆரம்பமாகியது. இந்நிகழ்வை பல நாடுகளில் இருந்து வடலியடைப்பைச் சேர்ந்த மக்களும் அவர்களது சொந்தங்கள் பலரும் பார்த்து பங்குபற்றி மகிழ்ந்தனர். அவுஸ்திரேலியா, அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, பிரான்ஸ், நோர்வே, நியூசிலாந்து மற்றும் இலங்கையில் இருந்து பல நிகழ்வுகள் இங்கு ஒளிபரப்பப்பட்டன. 83இற்கு மேற்பட்ட ZOOM இணைப்புகளும் 32இற்கு மேற்பட்ட Facebook இணைப்புகள் மூலமும் பல நூற்றுக்கணக்கானோர் இந்நிகழ்வில் கலந்தும், பார்த்தும் சிறப்பித்தனர்.



நிர்வாக சபை உறுப்பினர்களின் மங்கல விளக்கேற்றலுடன் நிகழ்வுகள் 11:15 மணிக்கு ஆரம்பமாகியது. வடலியடைப்பு ஒன்றியத்தின் முதலாவது தலைவர் ஆதி மூர்த்தி ஐங்கரனைத் தொடர்ந்து ஒவ்வொருவராக நிர்வாகசபை உறுப்பினர்கள் மங்கல விளக்கை ஏற்றினர். அதைத் தொடர்ந்து வடலியடைப்பு ஒன்றியம், கனடாவின் ஆதரவில் வடலியடைப்பில் இயங்கிவரும் வடலியடைப்பு நலன்புரி அமைப்பின் மாணவர்கள் வடலியடைப்பு ஐயனார் கோவிலில் இருந்து இறை வணக்கத்தைப் பாடினர். அடுத்து தமிழ்த் தாய் வாழ்த்தையும் கனடிய தேசிய கீதத்தையும் ஆரபி உதயநேசன் கனடாவிலிருந்து இசைத்தார்.

நிகழ்ச்சிகளை யோகன் அருளானந்தம் தொகுத்து வழங்கிக் கொண்டிருந்தார். அடுத்த நிகழ்வாக ஒன்றிய கீதத்தை வடலியடைப்பில் சங்கீத ஆசிரியையாக இருந்த சிதம்பரேஸ்வரி தர்மலிங்கம்



அவர்கள் நியூசிலாந்தில் இருந்து நேரடியாக வழங்கினார். இவற்றைத் தொடர்ந்து உயிரிழந்தோரை நினைவு கூர ஒரு நிமிடம் அமைதி வணக்கம் செலுத்தப்பட்டது.

இவற்றைத் தொடர்ந்து கலை நிகழ்வுகள் நடைபெற்றன. முதலில் வரவேற்பு நடனத்தை பவாதி மற்றும் கண்ணன் நகுலேஸ்வரன் சகோதரர் வழங்கினர்.



தொடர்ந்து இலங்கையிலிருந்து கவினா கனகேந்திரனின் திரையிசை நடனமும், ஜெர்மனியிலிருந்து கேசவன் நடராஜனின் கவிதையும் நடைபெற்றது. இவற்றைத் தொடர்ந்து இலங்கையிலிருந்து வடலியடைப்பு நலன்புரி அமைப்பின் நிறுவனர்களில் ஒருவரான கணபதிப்பிள்ளை கந்தசாமி அவர்களது வாழ்த்துரை நடைபெற்றது. அதில் அவர் வடலியடைப்பு ஒன்றியம் கனடா, வடலியடைப்பில் செய்து வரும் பணிகளைப் பற்றி விரிவாக விளக்கினார். கடந்த 21 வருடங்களாக வடலியடைப்பு மாணவர்களுக்கு கல்விச் சேவை வழங்கிவருவது, வடலியடைப்பு பாடசாலைகளைப் புனரமைப்புச் செய்தது, வடலியடைப்பு ஆலயங்களைப் புனரமைப்புச் செய்தது, தென்மராட்சியில் இருந்து இடம் பெயர்ந்தோருக்கானதும், கிளிநொச்சியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கும் வழங்கிய வாழ்வாதார உதவிகள் பற்றியும் குறிப்பிட்டார்.

கடந்த 21 வருடங்களில் வடலியடைப்பு ஒன்றியம்-கனடா 21 மில்லியன் ரூபாவுக்கு மேல் வடலியடைப்பு கிராமத்திற்கு சேவைகள் செய்துள்ளது. இவற்றில் குறிப்பாக 15 இலட்சம் ரூபாவை ஒரு நிலையான வைப்பில் சேமித்து வைத்து அதன் வட்டியிலிருந்து வடலியடைப்பிலிருந்து பல்கலைக்கழகம் புகும் பொருளாதார வசதியற்ற மாணவர்களுக்கு உதவி வழங்குவது குறிப்பிடத்தக்கது. இவற்றைச் செய்துவரும் வடலியடைப்பு அமைப்பு ஒன்றியம்-கனடாவிற்கு இறையருள் கிடைத்து அவர்களின் பணி மேலும் தொடர வாழ்த்தினர்.

நிகழ்ச்சிகளின் இடையில் ஒவ்வொரு மணித்தியாலத்தின் பின்னர் சிறிய இடைவெளி விடப்பட்டு பார்வையாளர்களுக்கு இடையே கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன. இக்கலந்துரையாடல்களில் நோர்வே, இங்கிலாந்து, இலங்கை, பிரான்ஸ் மற்றும் கனடாவில் இருந்து பார்வையாளர்கள் பங்கு பெற்றது சிறப்பாக இருந்தது.

இதனைத் தொடர்ந்து நடன நிகழ்வுகளை இங்கிலாந்திலிருந்து நீரஜா சண்முகதாசன், அமெரிக்காவிலிருந்து பார்கவி மகேந்திர ராஜா, ஆரண்யா அமிர்தராஜ், ஆரணி ரவீந்திரன் (அமெரிக்கா) ஆகியோரும் மயூரன் தர்மபாலன் மற்றும் கஜன், யோ. கெங்கேஸ்வரன் சகோதரர்கள் வழங்கினர்.



பாடல்களை அனிதா கிருஸ்ணா (அமெரிக்கா), லசுஜன் ஜெயக்குமார் (இலங்கை), சந்திரகாந்தன் பாலசிங்கம் (இங்கிலாந்து), காயத்திரி, கஸ்தூரி, இராமநிதி (இங்கிலாந்து), S.K. சுரேஸ் (இலங்கை), ஜனன் சிறீதரன், மதுமிதா கங்காதேவன் (இலங்கை), பவீனா, லக்ஸன், சிறீஜெயன், பாஸ்கரன் மயூரன், கவினா சிவஞானராஜா, ஐரகன் கிருபாகரன் (இங்கிலாந்து), குகன் நாதன், அஞ்சனா, அவானி வேணன், சேயோன் ஜெயரூபன், கஜா தர்மலிங்கம் (நியூசி



லாந்து) தினேசன் தேவதாசன் (அவுஸ்திரேலியா) ஆகியோர் வழங்கினர். key boardஜ ராகுல் ரூபிச்சந்திரன், அபிசன் கஜமுகன் வாசித்தனர். மிருதங்கம் நிகழ்வை தனுஜன் சந்திரகுமார், தில்லானா நிகழ்வை கிரிசாந் ஜெகநாதன் (அமெரிக்கா) மற்றும் தனுஷா கெங்கேஸ்வரன் (கனடா) சேர்ந்து வழங்கினர். நகுலேஸ்வரன் Card Game செய்து காட்டினார். சிறி அபிராமி நடனக் குழுவின் நாட்டிய நிகழ்வும், சோபிகா சிவரூபனின் பரத நாட்டிய நிகழ்வும் நடைபெற்றன.

நிகழ்வுகளுக்கு இடையில் ஆசி உரைகளை வடலியடைப்பு சனசமூக நிலையம் மற்றும் முதியோர் சங்கத் தலைவர் சிவானந்தன் அவர்களும், சிறி சித்தி விநாயகர் ஆலயத்தைச் சேர்ந்த பக்ராதன் துரைசிங்கம் அவர்களும், இராசாத்தி கோவிந்தசாமி (இலங்கை) அவர்களும் வழங்கியிருந்தனர். வாழ்த்து உரைகளை மதிவாணி விக்கினராஜா (இலங்கை), ரவீந்திரகுமார் பாலசுப்பிரமணியம் (இலங்கை) மற்றும் ஆரணி ஞானநாயகன் (கனடா) வழங்கினர்.

50 நிகழ்வுகள் நடைபெற்ற போதும் அவற்றை ஒரு நிகழ்வு ஏழு நிமிடங்களிற்கு உட்பட்டதாக மட்டுப்படுத்தப்பட்டு இருந்ததால் எல்லா நிகழ்வுகளும் சுறு சுறுப்பாக நடைபெற்றன. நிகழ்வுகளின் தரம் அவற்றைத் தயாரித்து அனுப்பியவர்களில் தங்கி இருந்தபடியால் அவை தரத்தில் வேறுபட்டிருந்தன. நிகழ்வின் இறுதியில் வடலியடைப்பு ஒன்றியம், கனடா செயலாளர் குமரேசன் மங்களேஸ்வரன் நன்றி உரை வழங்கினார்.

கொரோனா தொற்று நோய்ப் பரவலால் வடலியடைப்பு ஒன்றியம்-கனடா தனது வருடாந்த குளிர்கால ஒன்றுகூடலை மெய்நிகர் ஒளிபரப்பாக மாற்றியதால் உலகம் முழுவதும் உள்ள வடலியடைப்பு மக்களை ஒன்றாகக்காணும் சந்தர்ப்பத்தை இந்நிகழ்வு ஏற்படுத்தியது குறிப்பிடத்தக்கது. காலை 11 மணிக்கு ஆரம்பமாகிய இந்நிகழ்வு மாலை 6 மணிக்கு நிறைவடைந்தது. வடலியடைப்பு ஒன்றியத்தின் இந்த முதல் முயற்சியில் இடையிடையே சில தொழில்நுட்பத் தடங்கல் ஏற்பட்டாலும் இவ்வாறு ஒரு ஒன்று கூடலை உலகளாவிய வடலியடைப்பு மக்களை குறுகிய கால அவகாசத்துடன் ஒன்று சேர்த்து நடத்திய வடலியடைப்பு ஒன்றியம் கனடாவின் திறமையும், திட்டமிடலும் பாராட்டப்பட வேண்டியது.


விளம்பரம்
VLAMBARAM

31 ஆவது ஆண்டில்

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலக பொறுப்பாளர்: பிரசாந்தி அருள்தாசன்
பதிப்பு: Canyon Press Inc.



'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.



Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059/ FAX: 416-286-0344
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com


Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved






Don't miss out on your chance to see the Festival of Lights! The Ontario Power Generation Winter Festival of Lights transforms Niagara Falls into a palette of breath taking colour with millions of sparkling lights and animated displays located within the Niagara Parks, Dufferin Islands and surrounding tourist districts.

## Whats Included

- Complimentary Wifi
- $30 Keg Steakhouse Voucher
- $70 Ruth Chris Steakhouse Voucher
- Choice of premium wine or 20 tokens for our arcade!
- Complimentary on site parking!
- Ask us about our upgrade packages!



TRIDEL
BUILT FOR LIFE

WESTERLY

# NEW PROJECT BY TRIDEL (DUNDAS/ISLINGTON)




Get VIP Platinum Access to the Best Units and the Best Pricing

**416.321.6969**

**HomeLife / GTA Realty Inc.** Brokerage*

HOMELIFE
HIGHER STANDARDS

5215 Finch Ave. E., #203, Toronto ON. M1S 0C2

*Independently Owned & Operated


நம்மை நாமே
காத்துக் கொள்வோம்!
முழங்கையால்
மறைத்து
இருமலாம்
உங்கள்
கைகளைக்
கழுவுங்கள்
2 m
அனைத்து வகையான பொது போக்குவரத்திலும், மூடப்பட்ட அல்லது ஓரளவு மூடப்பட்ட பொது இடங்களில் 10 வயது அல்லது அதற்கு மேற்பட்ட அனைவருக்கும் இந்த வழிமுறைகள் பின்பற்றப்பட வேண்டியது கட்டாயமாகும்.
எப்போதும் 2மீ
இடைவெளிவிடுங்கள்
உங்கள் முகத்தை
மறைக்கவும்
Québec.ca/coronavirus
1 877 644-4545
Votre
gouvernement
Québec

# 304 (THREE-NOUGHT-FOUR) விளையாட்டின்

## முதலாவது இணையவழி உருவாக்கமும் முதலாவது உலகக்கிண்ணப் போட்டியும்

இன்றைய உலக ஒழுங்குமுறைக்கு அமைவாக மிகவும் சவாலான சூழ்நிலையில் இணைய வழிமூலமாக (Online) விளையாடும் வகையில் 304 (THREE- NOUGHT - FOUR) என்று அழைக்கப்படும் விளையாட்டு மிகமிக சிறப்பாக இணையத்தளத்தில் (the304game.com) வடிவமைக்கப்பட்டிருப்பதுடன் இவ்விளையாட்டின் முதலாவது உலகக் கிண்ணப்போட்டியும் இணையவழித்தடமூடாக ஏற்பாடு செய்யப்பட்டு நடந்தேறியிருக்கின்றது.

304 விளையாட்டானது இலங்கையில் மிகவும் பிரபலமானது குறிப்பாக தமிழ் மக்களிடையே உயர்கல்வி நிலையாளர்கள் முதல் சாதாரண பாமரமக்கள் வரை 80 வயது தாண்டியும் பலதரப்பட்ட மக்களாலும் விளையாடப்பட்டு வந்தது. இதற்கென எழுதப்பட்ட விதிமுறைகள் எதுவும் இல்லாது விளையாடப்பட்டு வந்த நிலையில் பெரும்பாலும் போட்டிகள் சச்சரவாக முடிவடையும். ஆனாலும் மறு நிமிடமே அதே குழுவினரே இணைந்து விளையாடு வர். இவ்வாறாக எழுதப்படாத, ஒழுங்குபடுத்தப் படாத, விதிகளோடு விளை யாடப்பட்டு வந்தமையே ஏனைய உலக மக்களிடத்தில் சென்றடையத் தவறிவிட்டது. இந்த நிலைமையில் கணினி தொழில்நுட்ப துறையில் பயணித்து வரும் கனடா வாழ் ஈழத்தவரான திரு. மகேன் வாகீசன் அவர்களது சிந்தனை இன்று ஓர் ஒருமுகப்படுத்தப்பட்ட விதிமுறைகளுடன் நெறிப்படுத்தப்பட்ட இணைய முறையில் விளையாடும் வகையில் 304 விளையாட்டு வடிவமைக்கப்பட்டிருப்பது இவ் விளையாட்டில் ஏற்பட்டுள்ள ஒரு புரட்சியே. COVID-19 நோய்த்தொற்றின் உலகளாவிய ஆரம்ப முடக்க காலத்தில் ஆக்க பூர்வமான சமூகமயமாக்கலிற்கான அவசியம், அனைவருக்குமே ஏற்பட்டிருந்தது. இந் நிலையிலேயே இணையவழி 304




விளையாட்டு மென்பொருள் உருவாக்கும் சிந்தனை திரு. மகேன் வாகீசனுக்கு ஏற்பட்டிருந்தது. இதன் அடிப்படையிலான இவரது முயற்சியே இன்று நாமனைவரும் நட்புறவை தொடர்ந்து பேணும்வகையிலும், அன்பான உணர்வுகள் பேணப்படும் வகையிலும், நல்லதொரு வாய்ப்பை இவ் விளையாட்டு அனைவருக்கும் ஏற்படுத்தித் தந்திருக்கிறது.

அத்துடன் 304 விளையாட்டை விளையாட விரும்பும் அனைவருமே இதனை நிகழ்நேர, மற்றும் மெய்நிகர் விளையாட்டாகவும், விளையாடும் வகையில் அவர் உருவாக்கியமையானது, 304 விளையாட்டு வரலாற்றில் ஒரு மைல்கல் எனும் நிலையையும் தொட்டுவிட்டிருக்கிறது.

தற்போது, 25க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த 1000க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் the304game.com என்ற இந்த இணையத்தளத்தை பயன்படுத்துகின்றனர் மற்றும் வெவ்வேறு இடங்களில் இருக்கும் தங்கள் நண்பர்களுடன் விளையாடுகின்றனர்.

இந்த விளையாட்டை மற்ற சமூகத்தினரும் விளையாடும்வகையில் செயற்படுத்தி அறிமுகப்படுத்துவதே அடுத்த முக்கிய இலக்காகும். விளையாட்டின் செயற்பாட்டு ஒலி ஒளி விளக்க வீடியோப்பதிவுகள் புதிதாகக் கற்றுக்கொள்பவர்களுக்கு உறுதுணையாக இருக்கும். இதன்மூலம் தங்கள் நண்பர்களுடன் இணைந்து எளிதாக புரிந்து கொண்டு விளையாடமுடியும். இந்த இணைய முகப்பு பயன்பாட்டு முறைகள் அனைத்துமே மிக எளிமையான வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. உங்கள் சாதாரண கணினிகள் அனைத்திலும் கூகிள் குறோம் வழித்தடம் மூலமே விளையாட முடியும்.

கைத்தொலைபேசி (Mobile Phone) மற்றும் ரபிலெற் (Tablet)களில் விளையாடக்கூடிய முறைகள் மட்டும் இன்னும் வடிவமைக்கப் படவில்லை. ஆனால் இவற்றிற்கான ஒழுங்கமைப்பு முறைகள் 2021ஆம் ஆண்டின் மத்திய பகுதிக்குள் நிறைவுபெற்றுவிடும்.

304 விளையாட்டு சமூகத்தின் மற்றொரு மைல்கல் சாதனை கனடாவின் திரு. சிவகுமார் நவரத்னம் தலைமையிலான the304game.comஇன் 1ஆவது 304 விளையாட்டு உலக போட்டி ஆகும். the304game.com இணையம் இருந்தமையினால் மட்டுமே, இந்த உலகக்கிண்ணப் போட்டியை உலகம் முழுவதும் உள்ள நம்மவர்களை இணைத்து நடத்த முடிந்திருந்தது

அவுஸ்திரேலியா, கனடா, டென்மார்க், பிரான்ஸ், நோர்வே, இலங்கை, சுவிட்சர்லாந்து மற்றும் இங்கிலாந்து ஆகிய 8 நாடுகளிலிருந்து போட்டியாளர்கள் the304game.com நடத்திய இம்முதலாவது உலகக்கிண்ணப்போட்டியில் பங்கேற்றிருந்தனர்.

**போட்டி முடிவுகள்**

வெற்றியாளர்கள் - பிரான்ஸ் (தங்கராசா சிவசிறி, யோகசிங்கம் தம்பா (சுரேன்)
இரண்டாம் இடம் _ கனடா (அருண் நந்தகுமாரன், சிவா இராசியா, ரவி ரவீந்திரன்) மூன்றாம் இடம் - இலங்கை (சுரேந்திரநாத் சுரேந்திரகுமார், பிருத்விராஜ் அருள்குமாரன்)



எதிர்கால வெற்றி மற்றும் சாதனைகளுக்கு திரு. மகேன் வாகீசன் மற்றும் அவரது குழுவினருக்கு நல்வாழ்த்துகள் மற்றும் பாராட்டுகள்.

# பொங்கல் வாழ்த்து

தைத்திங்கள் பிறக்கிறது
தைப்பொங்கல் வருகிறது
தை, தை எனக்குதித்து
‘தை’ மகளை வரவேற்போம்
உலகோர் பசி தீர்க்க
உழைக்கின்ற உழவர்க்கு
உற்சாகம் தருகின்ற
உன்னத விழாவன்றோ!



ஏரோட்டி, சால் அமைத்து
நீர் பாய்ச்சி, நாற்றுநட்டு,
களையெடுத்து, எரு இட்டு,
தலையெடுத்த பயிரை
அறுவடை செய்தடுக்கி,
அறுவடைமுடித்த வயலில்
புத்தடுப்பு தானமைத்து
புதுப்பானைப் பொங்கலிட்டு
புத்தாடை தானுடுத்து
பொங்கிவரும் பால்கண்டு
பொங்கலோ பொங்கலெனக்
குலவையிட்டுக் கொண்டாடி,
ஆதவனைக்கும்பிட்டு
ஆவினத்தைச் சீராட்டி,

நன்றி நவிலும் நாளே
பொங்கல் எனும் நன்னாள் - இது
உழவர்களின் திருநாள்.

ஊரார் பசிதீர்க்கும்
உழவர்தம் துயர்தீர்க்க
உரிய விலைகொடுத்து
உயர்த்திடுவோம் அவர்நிலையை.

இடைத்தரகர் எனும் ஈனப்பிறவிகளின்
கொட்டத்தைத் தானடக்கி
கொள்ளையைத் தடுத்திடுவோம்.

நீர்நிலைகள் புனரமைத்து
நீர்வளம் பெருக்கி பயிர்
வீணாகும் நிலையை
விரைந்து சரிசெய்வோம்.

இயற்கைப் பேரிடரால்
இன்னல் விளைந்தக்கால்
நம் கை கொடுத்து அவர்க்கு
நம்பிக்கை அளித்திடுவோம்.

வில்லேருழவர்க்கும்,
சொல்லேருழவர்க்கும்,
எல்லோர் வயிற்றுக்கும்
நல்லேர்தான் ஆதாரம்.

உழவுக்கும், உழவர்க்கும்
உழைப்புக்கும் வந்தனம்.

# தைப்பொங்கல்



பொங்கல் உலகத் தமிழர்
போற்றிக் காக்கும் திருநாளாம்
எங்கும் உள்ள தமிழர்
இணைந்து மகிழும் திருநாளாம்

நீண்ட நாளாய் எதிர்பார்த்த
நெஞ்சை அள்ளும் பெரும்பொங்கல்
ஆண்டின் தைமுதல் நாளதிலே
அனைவரும் மகிழ வருகிறது

பொங்கல் நாளில் நாமெல்லாம்
பொழுது புலரும் முன்னெழுந்து
எங்கும் மஞ்சள் நீர்தெளித்து
எழிலாய்க் கோலம் போட்டிடுவோம்

முற்றம் தன்னை மெழுகிடுவோம்
மூன்று அடுப்பு வைத்திடுவோம்
வெற்றுப் பானையை அதில்வைத்து
வேண்டும் பால்நீர் ஊற்றிடுவோம்

குற்றிய பச்சை அரிசியையும்
கோது உடைத்த பயற்றினையும்
அற்புத மாகக் கலந்தெடுத்து
அப்பா உலையிற் போட்டிடுவார்

பானையில் விட்ட பால்பொங்கி
பகலவன் பக்கம் சரிகையிலே
வானை முட்டும் சத்தத்தில்
பொங்கலோ பொங்கல் என்றிடுவோம்

போட்ட அரிசி வெந்துவரப்
பூவாய்த் துருவிய தேங்காயைப்
போட்டு அதனுடன் சர்க்கரையும்
முந்திரி, பருப்பும் கலந்திடுவோம்

பொங்கல் பொங்கி முடிந்தவுடன்
புதிய வாழை இலைபோட்டுப்
பொங்கல் தன்னைக் கதிரவன்முன்
போற்றிப் படைத்து மகிழ்ந்துண்போம்!

இந்த நாள்போல் உறவுகளும்
ஈழ மண்ணில் சுதந்திரமாய்
எந்த நாளும் வாழுதற்கு
இயன்ற வரைநாம் கைதருவோம்!

புத்துணர் வளிக்கும் நாளிதிலே
புலம்பெயர்ந் திருக்கும் தமிழர்நாம்
ஒற்றுமை காத்து எம்மினத்தின்
உரிமைக் காகக் குரல்தருவோம்!

சபா. அருள்சுப்பிரமணியம்

# ஒவ்வொரு வாரமும் உங்களை நீங்களே கேட்டுக்கொள்ள 20 கேள்விகள்

**1. கடந்த வாரம் நான் என்ன புதிதாகக் கற்றுக்கொண்டேன்?**
இதற்கு பதிலளிப்பதில் சிக்கல் இருந்தால், நீங்கள் உங்களை மாற்றவேண்டிய நேரம் இது. நீங்கள் எவ்வளவு வயதானாலும், ஒவ்வொரு வாரமும் அல்லது ஒவ்வொரு நாளும் புதிதாக ஒன்றைக் கற்றுக்கொள்ள வேண்டும்

**2. கடந்த வாரத்தில் நான் செய்த மிகப் பெரிய சாதனை என்ன?**
உங்கள் சாதனைகளின் பிரதிபலிப்புத்தான் எதிர்காலத்தில் உங்கள் தன்னம்பிக்கையை வளர்ப்பதற்கான ஆரோக்கியமான மற்றும் சக்திவாய்ந்த வழியாகும்.



**3. கடந்த வாரம் நடந்த நிகழ்வுகளுள் எந்த நிகழ்வு மிகவும் மறக்கமுடியாதது ஏன்?**
இந்த சிறப்பு நிகழ்வுகளும் அர்த்தமுள்ள உரையாடல்களும் எதிர்காலத்தில் சில முக்கியமான தருணங்களில் சிந்திக்க வைக்கிறது.

**4. இந்த வாரம் நான் நிறைவேற்ற வேண்டிய மிகவும் முக்கியமான விடயம் என்ன?**
வாரம் துவங்குவதற்கு முன்னரே இந்த விடயத்தை முன்னுரிமைப்படுத்தி வாரம் முழுவதும் உங்களால் அதில் கவனம் செலுத்த உதவுகிறது.

**5. வாரத்தை குறைந்த மன அழுத்த முள்ளதாக மாற்ற நான் இப்போது என்ன செய்ய முடியும்?**
உங்கள் நாள்காட்டியில் (calendar) உடுப்பு களைச் சலவை செய்தல், வாகனத்திற்கு எரிபொருள் நிரப்புதல் மற்றும் ஏனைய சிறிய வேலைகளைக்கூட நினைவூட்டலில் (reminder) எழுதி, உங்களை ஒழுங்கமையுங்கள்.

**6. கடந்த வாரம் என்னைப் பாதித்த எந்த சம்பவம் வரவிருக்கும் வாரத்திலும் என்னைப் பாதிக்கக்கூடியது?**
இப்படிச் சிந்திப்பது உங்கள் போராட்டங்களிலிருந்து கற்றுக் கொள்வதோடு, வரவிருக்கும் வாரத்திற்கு உங்களை சிறந்த முறையில் தயார்ப்படுத்துவதாகும்.

**7. கடந்த வாரம் எவ்வாறு அதிக நேரத்தை வீணடித்தேன்?**
கடந்த வாரத்தில் நீங்கள் எவ்வாறு நேரத்தை வீணடித்தீர்கள் என்பதை அறிந்து கொள்வது, இந்த வாரத்தையும் எதிர் காலத்தையும் தெளிவாகத் தெரிந்து கொள்ள உதவும்.

**8. வாரத்தில் ஏதேனும் பாரமான பொருட்களை தூக்கிச் செல்லும்போது கைதவற விட்டேனா?**
இது மன ஒழுங்கீனம், உடல் ஒழுங்கீனம், உங்கள் மீது அளவுமீறிய நம்பிக்கை என்பவற்றைக் குறிக்கும்.

**9. சென்ற வாரத்தில் செய்ய வேண்டியதை நான் செய்யாமல் தவிர்த்திருக்கிறேனா?**
சில நேரங்களில் செய்ய வேண்டிய முக்கியமான விஷயங்களை நாங்கள் தவிர்க்கிறோம். உங்களை நீங்களே கேட்பது உங்களை நடவடிக்கை எடுக்கத் தூண்டும் ஒரு சக்திவாய்ந்த வழியாகும்.

**10. சென்ற வாரத்தில் தவறவிட்ட இன்னும் எத்தனை வாய்ப்புகள் உள்ளன?**
கடந்த வாரம் அல்லது அதற்கு முன்னர் கிடைத்த ஒரு புதிய வாய்ப்பை நீங்கள் இன்னும் சரியாகப் பயன்படுத்தவில்லையா? அப்படியானால், இந்தக் கேள்வி அதை மறந்துவிடாமல் இருக்க உதவும்.

**11. நான் பேசுவதற்கு ஏற்ற யாராவது இருக்கிறார்களா?**
என்னைப் போன்ற தனியாக வாசிப்பதற்கும், ஆராய்ச்சி செய்வதற்கும், எழுதுவதற்கும் விரும்பும் ஒரு தனிமனிதன், நல்ல நண்பர்களுடன் தொடர்பினை ஏற்படுத்தி சிக்கல்கள் வருவதற்கு முன்னே அவற்றைத் தீர்ப்பதை உறுதிசெய்யலாம்.

**12. ஒரு பெரிய நன்றி?**
எப்போதும் நாம் நன்றி சொல்ல யாராவது இருக்கின்றனர். சில நேரங்களில் நாங்கள் அதை எங்களுக்கு நினைவூட்ட வேண்டும். ஒவ்வொரு வாரமும் ஒரு நபருக்கு நன்றி தெரிவிப்பது உங்கள் உறவுகளுக்கிடையே இடைவெளியைக் குறைக்கும்.

**13. இந்த வாரத்தில் வேறு ஒருவருக்கு நான் எவ்வாறு உதவ முடியும்?**
எனது சொந்தக் குறிக்கோள்களைப் பற்றி நானே இலகுவாகக் குழப்பமடைவதுண்டு. இந்தக் கேள்வி என்னைச் சுற்றியுள்ளோருக்கு அவர்களின் குறிக்கோள்களுக்கு உதவுவது முக்கியம் என்பதை நினைவூட்டுகிறது.

**14. அடுத்த 3 ஆண்டுகளுக்கு எனது முக்கியமான 3 இலக்குகள் யாவை?**
இது உண்மையில் முக்கியமானது. நீங்கள் தொடர்ந்து நினைவூட்டவில்லை என்றால் இலக்குகளில் கவனத்தை இழப்பது எளிதானது.

**15. எனது சமீபத்திய செயல்களில் ஏதேனும் என்னை எனது இலக்குகளுக்கு நெருக்கமாக நகர்த்தியுள்ளதா?**
எனது பதில் இல்லை என்றால், நான் உடனடியாகச் சில மாற்றங்களைச் செய்ய வேண்டும் என்று எனக்குத் தெரியும்.

**16. ஒவ்வொரு குறிக்கோளுக்கும் அடுத்த கட்டம் என்ன?**
உங்கள் இலக்குகளை அடைவதற்கான அடுத்த கட்டம் உங்களுக்குத் தெரியாவிட்டால், உங்கள் சாதனையை நோக்கி உங்களை எடுத்துச்செல்லும் எந்த நடவடிக்கைகளையும் நீங்கள் எடுக்க முடியாது.

**17. வரவிருக்கும் வாரத்தில் நான் எதை எதிர்பார்க்கிறேன்?**
இந்தக் கேள்வி என்னை உந்துதலாக வைத்திருக்கிறது. எதைப்பற்றி யோசிக்க முடியாவிட்டால் நான் எதிர்நோக்கும் ஒன்றை உடனடியாகத் திட்டமிடலாம்.

**18. என் அச்சங்கள் என்ன?**
ஒவ்வொரு வாரமும் எனது அச்சங்களை உணர்வுபூர்வமாக வெளிப்படுத்துவதன் மூலம், அவற்றைத் தீர்க்கத் தேவையான தனிப்பட்ட வேலைகளைச் செய்ய இது எனக்கு உதவுகிறது. பெரும்பாலும் சிறிய இலக்குகளை நிர்ணயிப்பது என் அச்சங்களை குறைக்க உதவும்.

**19. நான் எதற்காக மிகவும் நன்றி உள்ளவனாக இருக்கிறேன்?**
நான் இதை ஒவ்வொரு நாளும் செய்யும் போது, ஒவ்வொரு வாரமும் எனது தினசரி பட்டியல்களிலிருந்து தனித்து நிற்கும் ஒரு விஷயத்தை முன்னிலைப்படுத்த விரும்புகிறேன்.

**20. எனக்கு வாழ ஒரு வாரம் மட்டுமே உள்ளது என்று எனக்குத் தெரிந்தால், நான் யாருடன் என் நேரத்தை செலவிடுவேன்?**
வாழ்க்கை குறுகியது என்பதற்கான ஒரு பயனுள்ள நினைவூட்டல், யாராவது எனது பட்டியலில் இருந்தால் நான் அவர்களுடன் நேரத்தை செலவிட வேண்டும்.

## முப்பத்தோராம் ஆண்டுக்குள் முனைப்போடு...

முழுமதி போல் முப்பத்தோராம் ஆண்டுக்குள்
முனைப்பொடு நுழையும் விளம்பரமே
விழுதெறிந்து நிற்கும் ஆலமரமாயென்றும்
விளங்குவாய் இவ்வுலகில் வருங்காலத்திலும்
வழுவாத நெறியுடன் வலம்வருவாய்
வற்றுமா நின்சேவை பத்திரிகையுலகில்
முழுதாக வரலாறு படைத்தாயிங்கு
முன்னேறு முன்னேறு வாழ்த்துகிறோம்!

வாழ்த்துகிறோம் உளமார காலமெலாம்
வளங்கொழிக்க ஓடுகின்ற காட்டாறுபோல்
சூழ்ந்துவரும் கொரோனாவின் பாதிப்பிலும்
சுறுசுறுப்பாய் சேவைதனைத் தொடருகிறாய்
வீழ்ந்திடாமல் நிமிர்ந்துநிற்கும் நாணல்போல்
விளம்பரமே! நீநிமிர்ந்து நிற்கின்றாய்
பரவட்டும் நின்சேவை இந்தப்பாரினிலே
பகலவனாய் ஒளிதரநாம் வாழ்த்துகிறோம்!

எத்தனை தடைகளிங்கு வந்தாலென்ன?
எத்தனை நோய்நொடிகள் வந்தாலென்ன?
புத்தம்புதிதாக இவ்வாண்டுக்குள் புகுந்திடுவாய்
புவனம் போற்றப் புகழ்பெறுவாய்
இத்தரையெங்கும் நின்சேவை தொடரட்டும்
இளையோரும் முதியோரும் சிறுவர்தாமும்
சத்தியமாய் உன்னாலே மகிழ்வுறுவர்
சாதனை படைத்திடுவாய் வாழிவாழி!

உலகில் நடைபெறும் புதினங்கள்யாவும்
உன்வரவால் யாவரையும் சென்றடையும்
விலகும் மாந்தர்தம் சந்தேகங்கள்
விளையும் அதனாலே கோடிநன்மை
பலரும் விரும்புகின்ற கதைகள் கவிதைகள்
பாங்குறு அறிவுக் கட்டுரைகள்
நிலவும் சூழ்நிலைக்கமைந்த விளம்பரங்கள்
நிறைவாய்த்தரும் விளம்பரமே நீவாழி!



கவிஞர் புரட்சிபாலன்
வன்கூவர்


## MATH & PHYSICS TUTORING

By a well-qualified and experienced teacher
For all grades from Grade 4 to 1st year of university

Special classes
- Advanced function
- Calculus & vectors
- Data management

All Classes available in Scarborough & Stouffville



Contact: 647.340.9490 / 416.732.2228


## அருமையான வாசகம்

படுத்தே இருப்பவனுக்கு
பாயே பகையாகும்..!
பேசியே திரிபவனுக்கு
வாயே பகையாகும்..!
பாயைச்சுருட்டினால்
ஆரோக்கியமாக வாழலாம்.
வாயைச்
சுருக்கினால் ஆனந்தமாக வாழலாம்..'

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & OLD FINCH**
2 Bedroom bsmt for rent. Sep entrance. Sep Laundry. 1 Car Parking. No smoking & No pets. Avail January 01, 2021.
**Contact : 416.854.2673**

**MARKHAM & STEELES**
3 bedroom newly renovated, basement for rent. Sep. entrance,parking. Small family preferred. No smoking, no pets.
**Contact: (647) 712-2692**

**MCCOWAN & ELSON**
2 bedrooms bsmt for rent. Sep.entrance. Avail.Immediately.
தொடர்புகளுக்கு: **647.782.2777**

**MORNINGSIDE & OLD FINCH.**
2 bedrooms, one washroom Walkout Bsmt for rent. One parking. Avail. Immediately.
**416.710.8304/647.717.9157**

**SCARBOROUGH GOLF & BRIMORTON**
2 bedroom with 2 washroom Sep.entrance. Close to all facilities.
தொடர்புகளுக்கு: **416.836.5482**

**MORNING SIDE & ELLESMERE**
2 bedroom with one washroom Walk out bsmt for rent. Sep. laundry Close to all facilities.
தொடர்புகளுக்கு: **416.836.5482**

**MORNINGSIDE & OASIS BLVD**
1 bedroom bsmt for rent. Laundry and car parking. Only for Pentecost christians. Close to school, TTC. Avail.Immediately
**Contact: 416.831.8549**

**MORNINGSIDE & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance. Parking, laundry, internet. Close to all facilities. Avail. immediately.
**647.710.2708/647.531.9624**

**MARKHAM & STEELES**
1 Bedroom bsmt for rent. Sep.entrance, parking. Female student or family preferred. Close to Bus. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.829.3212**

**KENNEDY & EGLINTON**
2 Bedrooms Bsmt for Rent. Sep. Entrance. Close to kennedy subway. couple or ladies preferred. Avail. January 01, 2021.
தொடர்புகளுக்கு : **416.669.4210**

**BELLAMY & PAINTED POST**
2 Bedroom renovated basement for rent. Sep. entrance. Close to all facilities. Avail. January.
**Contact Julian- 416.662.6119**

**KENNEDY & LAWRENCE**
1 Bedroom for rent. Sep. entrance. Close to all facilities. Only women.
தொடர்புகளுக்கு : **647.709.8484**

**MCCOWAN & ELSON**
2 Bedroom bsmt for rent. Sep.entrance, parking. Close to all facilities. No pets or No smoke.
**437-244-9026 / 416-937-1352**

31 ஆவது ஆண்டில்
விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com

விளம்பரம் பத்திரிகை வெளியிடப்படும் (vlambaram.com) சிறு விளம்பரங்களைக் கொண்ட 14,15,16,17 ஆகிய பக்கங்களின் அச்சுப் பிரதிகளை GTA Square இலும் ஏனைய முன்னைய தமிழ் வர்த்தக நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

## BASEMENT FOR RENT

**BRIMLEY & LAWRENCE**
2 Bedroom basement for rent. Rent $1400. Close to all facilities.
தொடர்புகளுக்கு: **416.825.9209**

**LAWRENCE & GOLF CLUB**
2 bedroom bsmt for rent. Sep. entrance. Close to TTC bus service. Close to all necessary amenities.
தொடர்புகளுக்கு: **647.629.9096**

**MIDDLEFIELD & DENISON**
2 Bedroom 1 bathroom
Separate entrance with parking
Close to YRT and TTC, schools and shops
**Call (416) 648-1987 or (416) 669-3549**

**MARKHAM & ELLESMERE**
2 Bedroom bsmt for rent Sep. Entrance Close To TTC high school & College University of toronto, HWY 401 & Hospital.
**Call For Sri : 647.720.2617**

**MARKHAM & HIGHGLEN AVE**
3 **bsmt for rent.** Sep. entrance, sep. laundry. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647-762-5804**

**HWY 7 & 9TH LINE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance. 1 Parking. Close to all facilities. Avail. February 01, 2021
தொடர்புகளுக்கு: **416.737.1146**

**MEADOWVALE & ELLESMERE**
2 bedroom basement for rent. Sep.entrance. Close to all facilities.
**Contact number : 647.409.1552**

**MORNINGSIDE & STAINS**
2 Bedroom bsmt for rent. Sept. Entrance, 1 parking. Close to all facilities. Avail.January 01,2021.
**416.494.7149 /647.467.1622**

**STEELES & STAINES RD**
2 Bedroom, 1 washrooms, Sep. laundry, sep.Entrance with 2 parking lot spot. No smoking & No pets (expecting Sri lankan )
Contact: **416.388.2794**

**MCCOWAN & MCNICOLL**
3 Bedrooms bsmt for rent. Sep. entrance, Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.823.3667**

வீடு, அறை, நிலஅறை (**BSMT**), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

## BASEMENT FOR RENT

**Morningside & Morningview Trail**
2 Bedrooms newly renovated Bsmt for Rent. Living room & 1 parking. Family preferred.
தொடர்புகளுக்கு: **(416) 564- 4200**

**NEILSON & MCLEVIN**
1 Bedroom furnished Bsmt for Rent. Sep. Entrance. No pets or no smoke. Close to 401,mall, TTC@door UofT, centaial. Parking
தொடர்புகளுக்கு: **416.834.1081**

## BASEMENT FOR RENT

**KENNEDY & EGLINTON.**
Brand new basement with 3 bedroom and 2 washroom.Has a separate entrance and a room for washer and dryer. It is within 2 minutes walking distance to Kennedy subway station
**Contact. 647.501.2720**

## BASEMENT FOR RENT

**Dixie & Kingston (Pickering)**
2 Bedrooms Bsmt for Rent. Sep. Entrance. 2 parking. Couple, small family or ladies. Avail. Immediately.
**Contact Bala : 416-890-5520**

## BASEMENT FOR RENT

**Middlefield & Elson**
2 bedroom basement for rent. Sep.entrance 1car parking. Close tofacilities.
**Please contact Kamal for further details.**
**647-625-3243**

## BASEMENT FOR RENT

**HWY 7 & 9TH LINE**
2 bedroom high Ceilings basement Apartment for rent. Sep.entrance. kitchen, parking, Laundry, Elementary, high schools. Closed to all facilities. No pets. Couple or small family preferred. Avail Immediately.
தொடர்புகளுக்கு: **416.834.3568**

மேலும் பக்கங்கள் 15, 16, 17

## ROOM FOR RENT

**MARKHAM & SHEPPARD**
1 bedroom for rent in a house. No parking. Only for male. Avail. immediately
தொடர்புகளுக்கு: **647.648.1673**

**FINCH & MORNINGSIDE**
1Room for rent in the bsmt. Sep. entrance, internet, laundry. Male Preferred. shared kitchen & washroom. Avail.immediately
தொடர்புகளுக்கு: **647-606-8326**

**WARDEN & LAWRENCE**
3 அறைகள் கொண்ட Bsmtஇல் 1 அறை வாடகைக்கு உண்டு. ஆண்கள் மட்டும். புகைத்தல், மது இல்லாதவர்கள் விரும்பத்தக்கது.
மேலதிக தொடர்புக்கு: **647-708-3444**

**MIDDLEFIELD & DENISON**
Close to TTC and YRT, shops.
**Call (416) 648-1987 or (416) 669-3549**

**MCCOWAN & DENISON**
சந்திப்புக்கு அருகில் சகல வசதிகளுடன் 1 அறை, மற்றும் 1 Bedroom basement with Sep. entrance வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு : **647-678-2599**

**ELLESMERE & ORTON PARK.**
Room for rent in basement apartment with sep. entrance. Available now. Utilities included. Male tenant only.
**416.701.0667 / 647. 928.0667**

**NEILSON & MCLIVEN**
2 Room for rent in townhouse. No parking, laundry, internet. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.993.4951**

**LAWRENCE AVE & MORNINGSIDE**
1 Room for rent in a basement. Looking for a Male. Sep.entrance, car parking, and laundry included. Close to TTC & malls.
**416.509.3848 / 365.338.3406**

## BASEMENT FOR RENT

**STAINS & MORNINGSIDE**
1Bedroom bsmt for rent. Sep. entrance. With all amanitas everything included.
சகல வசதியுடன் கூடிய ஒரு அறை bsmt வாடகைக்கு உண்டு.
**416.505.7922/ 437.220.2287**

## BASEMENT FOR RENT

**MARKHAM & LAWRENCE**
Newly Renovated Furnished Basement for Rent:2 Bedrooms + Laundry, Washroom, Kitchen, & Living Room.1 Parking Spot (Walking Distance to Bus Stops, Cedarbrae Mall, Grocery Stores, Schools etc) Avail.January 1st, 2021.
**Please call or text 647-990-5969**



## BASEMENT FOR RENT
**9TH LINE & STEELES**
2 bedroom New basement for rent. 1 car parking lot, sep. entrance, sep. laundry room.
**Contact. 416-832-6276**

## BASEMENT FOR RENT
**BRIMLEY & FINCH**
2 Bedrooms, Sep. Entrance , Kitchen & Washroom, shared laundry. No Pets & No Smoking. Close to all Facilities. Avail. January 15, 2021.
**CALL OR TEXT:**
**647.642.2323 or 416.335.3460**

## BASEMENT FOR RENT
**McCowan & Sheppard**
Newly renovated spacious 2bdr/2bath/large kitchen. Open concept bSMT apartment, 1 bdr & bath on main floor. Sep.entrance, 1 parking included. Walking distance to STC, TTC, 401 & shopping facilities.
Avail Immediately.
**Please contact Kamal for further details.**
**(647-887-5478)**

## BASEMENT FOR RENT
**9TH LINE & 14TH AVE - MARKHAM**
2 bedrooms+ 2 bathrooms brand new basement for rent.
Sep. entrance, laundry, lots of facilities nearby, 2 car parking, no pets & no smoking. Ready for you to move.
**416-930-3713 / 416-768-1824**

## BASEMENT FOR RENT
**SHEPPARD & MIDLAND**
1 bedroom bsmt for rent.
No sep.entrance, parking, laundry. Close to TTC, Go train, agincourt mall.
Avail. January 01, 2021.
தொடர்புகளுக்கு:
**416.266.4789**

## BASEMENT FOR RENT
**BIRCHMOUNT RD & SHEPPARD AVE**
2 bedroom bsmt for rent.
Sep. entrance. Close to main rd, Bachelor, girls student welcome.
Avail. immediately.
contact: **416.899.9199**

## BASEMENT FOR RENT
**MORNINGSIDE & OLD FINCH.**
2 bedrooms Walkout Bsmt for rent. 1 washroom. 1 parking.
Nearest intersection is Avail. on December 15, 2020.
**416.710.8304/ 647.717 9157**

## BASEMENT FOR RENT
**MORNINGSIDE & SEWELLS**
Newly Renovated Sep.Entrance, 2 Bdrm, Bathroom, Sep.Laundry & 1 Parking. Looking for Female students or family. Close to Scarborough U of T, Centennial College , 3 mins drive to Hwy 401, 30sec walk to TTC Bus. No pets, $1500 plus 40% Utilities.
Avail.immediately .
**For more info: 416-829-4421 (Call or Text)**

## BASEMENT FOR RENT
**Morningside and Mcnicoll**
1 bedroom walkout basement, 1 parking, no smokers and no pets .
**For more info: 647-914-2032**

## ROOM FOR RENT
**MCCOWAN & FINCH**
1 large rooms for rent in an Apartment with furniture. Can share 2 people. Parking, internet.
No smoke or no pets. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.276.6884**

## ROOM FOR RENT
**MCCOWAN & FINCH**
one bedroom for rent in condo. Shared accommodations. Indoor laundry, Kitchen, Wifi, all inclusive. Suitable for ladies or students or couple. Avail.Suitable for ladies or students or couple. Avail.Immediately
தொடர்புகளுக்கு: **416.731.9662**

## BASEMENT FOR RENT
**NEILSON & SHEPPARD**
2 Bedroom Newly renovated basement for rent. 2 minutes walk to bus stop. Separate entrance. Female students or couples preferred. No parking. Avail. immediately.
தொடர்புகளுக்கு : **(647) 773-2759**

## HOUSE/BASEMENT FOR RENT
**TAPSCOTT & CROWTAIL**
1 bedroom basement for rent.
**BRIMLEY & STEELES**
3 bedrooms house for rent.
தொடர்புகளுக்கு:
**647.686.8590**

## SALE / RENT
**MARKHAM & SHEPPARD**
4 bedroom & 3 washroom house for **Sale.**
**NEILSON & SHEPPARD**
2 bedroom & 2wasroom Houses for **Rent.**
Kannan Kankesu: **416.834.4200**

## HOUSE FOR RENT
**BRIMLEY & EGLINTON (TOP-LEVEL)**
3 Bedrooms, 1 Washroom Bangalow house for rent. Parking. only for families.
Avail. February 01, 2021.
**Pl. Call: 647.406.2999**

**NEILSON & MCLIVEN**
3 Bedroom+den house for Rent. parking, laundry. Close to all Facilities.
Avail. immediately.
**647.534.5617 / 416.609.1484**

**MCCOWAN & BRIMORTON**
3 Bedroom upstairs, & 2 bedroom +1 den Bungalow house for rent. BSMT with sep. entrance. Close to Scarborough Centre.
Available immediately.
**416-918-5065/365-988-6673**

**MCCOWAN & LAWRENCE**
3+1 bedroom bangalow house rent. $2600. Parking, laundry. Avail. immediately.
**647.448.9120/647.448.7671**
**sugunasurya@hotmail.com**

## CONDO FOR RENT
**KENNEDY & HWY 401**
2 Bedroom, 2 full washroom luxury condo for rent. parking , locker, brand new appliances,free wifi, close to all facilities, avail. immediately.
**Contact number 647.607.4954**

## ROOM FOR RENT
**NEILSON & FINCH**
3 rooms available for rent in the brand new basement, each $500. One master bedroom room available fir $650 in upstairs, Half washroom in the room. Available immediately.
Utilities Included ,Wifi included
Shared kitchen, Shared washroom (for shower)
Car parking available for extra.
தொடர்புகளுக்கு: **416-837-1860**

## ROOM FOR RENT
**9TH LINE & 14TH AVE**
(Boxgrove Neighbourhood - close to Steeles) 1 Bedrm+ 1 ensuite bathroom in house. Rent: $650 utilities, parking, laundry. No Pets/No smoking/ Female Preferred
**Please call/text: 647.327.0553**

## பராமரிப்பாளர் தேவை
ஸ்காபரோவில் வாழும் Wheel Chairஇல் இருக்கும் வயதான பெண்மணி ஒருவரை வீட்டில் இருந்து பராமரிப்பதற்கு (Full Time) பெண் பராமரிப்பாளர் உடனடியாகத் தேவை. வெளிநாட்டில் இருந்தும் விண்ணப்பிக்கலாம்.
தொடர்புகளுக்கு:
தொடர்புகளுக்கு: **647.540.9520**

மேலும் பக்கங்கள் 14, 16, 17

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

## HOUSE/BASEMENT FOR RENT
**Markham & Denison**
4 Bedrooms New **house** in Markham and Denison. Close to Costco, 407, bus, banks and lots of facilities nearby.
One bedroom **basement** with sep. entrance. Lots of facilities nearby.
No smoking and No pets.
தொடர்புகளுக்கு:**416.879.9603**

## HOUSE /BASEMENT FOR RENT
**MARKHAM & SHEPPARD**
3 bedrooms **house** for rent with 1 bedroom WALK-OUT **bsmt** also available. SEP.ENTRANCE, Includes 3 parking, laundry. AVAIL. ANYTIME! Near a middle school, high school, Malvern mall, many fast-food places, library, and bus stops
**647-741-0469 or 647-898-6790**

## HOUSE /BASEMENT FOR RENT
**MARKHAM & DENISON**
4 Bedrooms New **house for rent** . Close to Costco, 407, bus, banks & lots of facilities nearby.
One bedroom **basement for rent** with sep. entrance. Lots of facilities nearby.
No smoking or No pets.
தொடர்புகளுக்கு: **416.879.9603**

## HOUSE FOR RENT
**KENNEDY Road, Scarborough**
**LAWRENCE.... EGLINTON**
THREE ROOMS PLUS LIVING ROOM. kitchen+dining+All facilities.
Fridge, LL washroom.
Close to all facilities. Pl call:
**647.719.5853/ 647.262.3899**

## HOUSE FOR RENT
**MCCOWAN & ELLESMERE**
3 bedroom house for rent main floor.1 washroom
1 car parking.
Avail.Immediately.
**Contact: 416.835.2003**

## HOUSE FOR RENT
**NEILSON & ELLESMERE**
3 bed house (bungalow ) for rent. $2,300. 1.5 washrooms. Master bedroom with walk-in closet & ensuite 2 pc washroom & 1 full washroom, plus Utilities 60% including car garage & total 2 parking. Avail. immediately
**call Ganesh 416-880-3636**

## வீடு வாடகைக்குபெற்றிட / கொடுத்திட
வாடகைக்கு வீடுகள், Condo., Bsmts போன்றவற்றை Scarborough, Markham, Mississauga, Brampton, Ajax பகுதிகளில் பெற்றிட
அழையுங்கள்: **647.402.2937**

## OFFICE SPACE FOR RENT

**MIDDLEFIELD & FINCH**

Avail. immediately.

தொடர்புகளுக்கு:

**647.296.7932**

## பராமரிப்பாளர் தேவை

ஸ்ரோவில் பகுதியில் 70 வயதான பெண் ஒருவரை பராமரிக்க பெண் பராமரிப்பாளர் தேவை. ஊதியம் வேலை நேரம் பேசி தீர்மானிக்கப்படும்

தொடர்புகளுக்கு : **416.558.4998**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & STAINES**

Newly Renovated Separate entrance Basement for Rent:2 Bedrooms + in suite Laundry, Washroom, Kitchen,& Living Room.1 Parking Spot, (Walking Distance to Bus Stops ,Grocery Stores, Schools etc.). NO PETS Avail. January 1st, 2021.

**Please call or text 647-200-9117**

## HOUSE / BASEMENT FOR RENT

**Intersection - KENNEDY & ST.CLAIRE**

**House :** 3 Bedroom house for rent. 1 Parking

Laundry : Shared Available date : ASAP - IMMEDIATELY

**Basement :** 3 Bedroom basement .

No parking. Laundry : Shared Available date : February 1st, 2021.

தொடர்புகளுக்கு: **647.609.7377**

## EXPERIENCED COOK WANTED

**Symposium resturant and lounge (449 Kent street, Lindsay, ontario)**

அனுபவமுள்ள **Cook** தேவை. முழு நேர வேலை உண்டு. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

**Experience Cook Need.** Full time job available

40 minute from Oshawa.1 hour from Markham or Scarborough.

**Contact: 416.841.0336**


## OFFICE SPACE FOR RENT

Office area and well equipped educational training/boardroom rooms are available for lease. Rooms are available for $650 and above. It is suitable for small individual office, training, conferences & professional meetings with all facilities.

**Two locations :** Toronto: **Markham and Finch** - Mississauga: **Hurontario and Matheson Blvd.**

**Please contact Sam at : 416-918-9848/416-857-7603**



## சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

**Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480**

3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough






# wpm Property Management

**Scarborough — Morningside/Sheppard- Detached**
(3+1 Brm + 3 Bath) Sep Entrance & Finished Basement. Family Friendly Neighbourhood. Close To Hwy 401, Shopping, Schools, Hospital, Transit, Etc. **[Asking $2500/m]**

*** Scarborough – Ellesmere Rd / Military trail – Bsmt**
2 Rooms Available for Students Or Professional. Rent included Utility & Internet. Walking distance to U Of T Scarborough. Close to Ttc & Hwy 401. **[Asking - $550/m]**

*** Scarborough – Ellesmere Rd / Military trail – Bsmt**
2 Rooms Available for Students Or Professional. Near U Of T Scarborough / Centennial College. Close to Ttc & Hwy 401. **[Asking each- $550/m]**

***Toronto - York St / Harbour St – Condo Apt**
(1 Brm + 1 Bath) Located In Prime Downtown Toronto. Walk To Financial District, Harbour Front, Public Transit, Union Subway And Go Station. **[Contact – karu.realor@gmail.com]**

***Etobicoke—Martingrove / Silverstone- Detached**
(3+1 Brm + 3 Bath) 5 Parking Spaces Available. 5 Min To 401. All Amenities Are Around. One Min Walking Distance To Bus Stop Is Also Available. **[Asking each- $2950/m]**

***Scarborough —Mccowan/Finch- Condo Townhouse**
(3+1Brm + 2 Bath) Perfect "End Unit" Close To Bus Stop, Top-Ranked School, Library, Etc. **[Contact – karu.realor@gmail.com]**

*** Markham - Markham / Major Mackenzie – Bsmt**
(2 Brm + 1Bath) Great Location. Completely Renovated. Close To Ttc, Hwy 407, Schools, Hospital, Go transit. 1 Parking **[Asking $1525/m]**

***Toronto — Front / Bathurst- Condo Apt**
(1 Brm + 1 Bath) 24 hrs Concierge Service. Close to Ttc, Easy Acces to Highways, CN Tower, Rogers Centre and More. **[Asking each- $1800/m]**

- வீடு ஒன்றை வாங்கி வாடகைக்கு விட்டு நல்ல வருமானம் தேட விரும்புகிறீர்களா? அல்லது
- ஏற்கனவே நீங்கள் வாடகைக்கு விட்டிருக்கும் வீட்டில் வாடகைப் பிரச்சனைகளின் நிர்வாகப் பொறுப்பை ஒப்படைக்க நம்பிக்கையான நிறுவனத்தைத் தேடுகிறீர்களா?
- நீங்கள் ஏற்கனவே வாழ்ந்துவரும் சொந்த வீட்டிலிருந்தே கடனை எடுத்து வீட்டை வாங்கும் தகுதி உங்களுக்கு இருக்கலாம்.

இத்துறையில் எனது 32 வருட அனுபவமும் எமது (WPM) Property Managemant நிர்வாகமும்
இதை உங்களுக்கு திருப்திகரமாக செய்து தரும் என்பதை முழுதாக நம்பலாம்.

**நம்பிக்கையுடன் அழையுங்கள்: கரு கந்தையா 416.616.7278**

**MANAGING RESIDENTIAL PROPERTIES**
Watsonpm1989@gmail.com

# முதலீட்டாளர்களே! நீங்கள் ஓய்வெடுங்கள்!!
## உங்கள் வீட்டை வாடகைக்கு கொடுத்து பராமரிக்கும் வேலையை நாங்கள் செய்து தருவோம்!!

**எமது சேவைகள்:**
- வீட்டின் சரியான வாடகையைத் தீர்மானிப்பது.
- வீட்டைச் சந்தைப்படுத்தி அதை விசாரிப்பவர்களுக்கு மேலும் தகவல் தருவது.
- தகுதியான வாடகையாளர்களை கூட்டிச் சென்று வீட்டைக் காட்டுவது.
- வாடகைக்குப் பெற விரும்புவோரின் வேலை வருமானம், நம்பகத்தன்மை என்பவற்றை உறுதி செய்து கொள்ளுதல்.
- தகுதியான வாடகையாளருடன் வாடகை ஒப்பந்தத்தை செய்து கொள்ளுதல்.
- வாடகையாளர் குடியேற முன்னரும் பின்னரும் வீட்டின் நிலைமையை கவனித்துக்கொள்ளுதல்.
- சரியான திகதியில் வாடகைப்பணத்தை அறவிட்டு வீட்டுரிமையாளரின் வங்கிக்கணக்கில் வைப்பிலிடுதல்.
- பிரச்சனை தரும் வாடகையாளர்களை வெளியேற்றும் முயற்சியில் ஈடுபடல்.
- வீட்டில் திருத்த வேலைகள் தேவைப்படும் போது அதில் அனுபவம் வாய்ந்தவர்களை அனுப்பித் திருத்தும் முயற்சியில் ஈடுபடல்.
- வருட முடிவில் அந்த வீட்டின் வரவு செலவுக் கணக்கை உரிமையாளர்களுக்கு ஒப்புவித்தல்.
- வாடகை ஒப்பந்தத்தை புதுப்பித்தல்.
- வருடாந்த வாடகை அதிகரிப்பை அறிவித்தல்.
- வீட்டின் பெறுமதியில் ஏற்ற இறக்கத்தை அறிவித்தல்.
- திரும்பவும் வீடு உங்களுக்குத் தேவைப்படும் போதுசரியான வழிமுறை களைக் கையாண்டு பெற்றுத்தரல்.
- வாடகைக்கு விடக்கூடிய குறைந்த விலையிலுள்ள வீடுகளை கண்டுபிடித்து வாங்க உதவி செய்தல்.
- வாடகைக்கு விடுவதற்கு வீட்டில் என்ன திருத்த வேலைகள் அவசியம் என்று அறிவுரை வழங்குதல்.

**You can relax while we take care of your investment property!**

**WATSON PROPERTY MANAGEMENT LTD**

**Direct: 416-284-9999**
WatsonPM1989@gmail.com
80 Corporate Drive, Unit 207
Scarborough, ON, M1H 3G5



Karu Kandiah Director
30+ Years in Real Estate

# சிலப்பதிகாரம் குறிப்பிடும் வாழ்வியல்

'இலக்கியம்' என்பது வாழ்க்கையில் பிரதி பலிக்கும் காலக்கண்ணாடி. ஒவ்வோர் இலக்கியமும் அந்தந்தக் காலத்து மக்களின் வாழ்க்கையை எடுத்துக் கூறுகிறது. மக்களின் வாழ்வியல் கூறுகள் சிலப்பதிகாரத்திலும் இடம்பெற்றுள்ளன. 1. திருமண முறை, 2. இல்லறம், 3. விருந்தோம்பல், 4. மக்கட்பேறு ஆகிய வாழ்வியல் இங்கு விளக்கப்படுகிறது.

## 1. திருமண முறை

**"கற்பெனப் படுவது கரணமொடு புணரக்**
**கொளக்குரி மரபின் கிழவன் கிழத்தியைக்**
**கொடைக்குரி மரபினோர் கொடுப்பக்**
**கொள்வதுவே"** (தொல்.பொருள். கற்பியல்)

தலைவியை மனமுவந்து பெற்றோர் தலை வனுக்குக் கொடுக்கத் தலைவன் மணந்து கொணடான் எனத் தொல்காப்பியம் குறிப் பிடுகிறது. களவு வாழ்க்கை இல்லாமல் பெற்றோர், சுற்றத்தார் ஆகியோர் தம் விருப்பத்துடன் திருமணம் நடைபெற்று, தலைவனும் தலைவியும் வாழ்கின்ற இல்லற வாழ்க்கையை,

**"களவின் வழி வாராக் கற்பும் என்றாங்கு"** (நம்பியகப் பொருள்)

என நம்பியகப் பொருள் எடுத்துரைக்கிறது. தலைவன், தலைவிக்குத் தேவையான மணப் பொருத்தங்களாக,

**"பிறப்பே, குடிமை, ஆண்மை ஆண்டொடு**
**உருவு நிறுத்த காமவாயில் நிறையே அருளே**
**உணர்வொடு திருவென முறையிறக் கிளந்த**
**ஒப்பினது வகையே"** (தொல்.பொருள்.)

எனத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

இக்கருத்தினடிப்படையில், கோவலன், கண்ணகி திருமணம் நடைபெற்றதாக இளங்கோவடிகள் மங்கல வாழ்த்தில் குறிப்பிட்டுள்ளார்.

**"அவரை இருபெரும் குரவரும் ஒருபெரு**
**நாளால் மணஅணி காண மகிழ்ந்தனர்"**
(சிலம்பு. மங்கல வாழ்த்து 41-42)

**"வருநிதி பிறர்க்கு ஆர்த்தும் மாசாத்துவான்**
**என்பான் இருநிதிக் கிழவன் மகன்**
**ஈரெட்டு ஆண்டு அகவையான இசைபோக்கிக்**
**காதலால் கொண்டேத்தும் கிழமையான்**
**கோவலன் என்பான் மன்னோ"**
(சிலம்பு. மங்கல வாழ்த்து, 34,40)

**"புகாநகர் அதுதன்னில் மாவான் நிகர்வண்கை**
**மாநாய்கன் குலக்கொம்பர் ஈகைவான் கொடியன்னாள்**
**ஈராறு ஆண்டு அகவையான்"**
(சிலம்பு 20,25, மங்கல வாழ்த்து)

இருபெரும் முதுகுரவரின் குடிச் சிறப்பறிந்து அவர்களின் திருமணம் நடைபெற்றதை அறிய முடிகிறது. இவ்வாறு அமையும் திருமணம் நல்ல நாள், நல்ல நேரத்தில் நடைபெற்றதால் வாழ்வு சிறப்பாக அமையும் என்ற நம்பிக்கை அடிப்படையில், திருமணச் சடங்குகள் நடைபெற்றன என்பதை,

**"மாமுது பார்ப்பான் மறைவழிக் காட்டிடத் தீவலம்**
**செய்வது காண்பர்கள் நோன்பு என்னை"**
(சிலம்பு 52-53, மங்கல வாழ்த்து) என்ற வரிகள் உணர்த்துகின்றன.

காலமாற்றம், சமூக, அறிவியல் பொருளா தார மாற்றம் நிகழ்ந்த போதிலும் பெரும் பாலான திருமணங்கள் பெற்றோர் தலைவி யைத் தலைவனுக்குக் கொடுப்ப, நல்ல நாள், நல்ல நேரத்தில் தலைவன் மணந்து கொள்ளும் முறையே இன்றும் காணப்படுகிறது.

## 2. இல்லறம்

**"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது"** (குறள்45)

என்னும் குறள் கருத்திற்கிணங்க, மனையறம் படுத்த காதையில், சிலகாலம் கோவலன், கண்ணகி வாழ்க்கை சிறப்பாக அமைந்தது. இல்லற வாழ்க்கையில் இன்பமும் துன்பமும் நிறைந்து காணப்படும் என்பதை இக்காதை உணர்த்துகிறது.

பரத்தமை ஒழுக்கம் அக்காலத்தில் இருப்பினும், கோவலன், மாதவி வழியாக, சமுதாயம் மறைமுகமாக ஏற்றுக் கொண்டி ருந்ததை உணரமுடிகிறது. பரத்தமை வாழ்க்கை தவறு என அற இலக்கியங்கள் கூறுகின்றன.

பரத்தமை ஒழுக்கத்திலிருந்து கோவலன் மீண்டுவந்தாலும் மனமுவந்து மனைவி யானவள் கணவனுடன் இல்லறம் நடத்த வேண்டும் எனப் பெண்ணுக்குச் சமுதாயம் இலக்கணம் வகுத்துள்ளது. இவ்இலக்கண மரபுப்படி மாறாதவளாக, கண்ணகி, கோவலன் மாதவியுடன் தங்கி வாழ்ந்த காலத்திலும், பிரிந்து வந்து அவளை மதுரைக்கு அழைத்தபோதும் பதில் கூறாமல் அவனுடன் செல்கிறாள்.

இல்லற வாழ்வில் பெண்ணுக்கு மகிழ்ச்சி தருவது எதுவெனில், கணவன் மனம் மகிழும் வண்ணம் இல்லறம் நடத்துவதே யாகும். கோவலன், கண்ணகியை விட்டுப் பிரிந்து நெஞ்சம் கலங்கியபோதும், சேர்ந்து வாழ்க்கை நடத்தும்போது இடைச்சியர் தந்த காய்கறிகளைத் தம் மெல்லிய விரல் சிவக்க, அழகு முகம் வியர்க்க, அரிவாள் மனையில் அரிந்து, சமையலறையில் நுழைந்து சமைத்து, கோவலன் பாதங்களை நீரால் கழுவி, சமைத்த உணவினை உண்ணுங்கள் என்று கூறி, அவன் மகிழ, தானும் மகிழ்ந்தாள் என்பதைக் 'கொலைக்களக் காதை' மூலமாக அறிய முடிகிறது.

"ஈனாத வாழைக் குருத்தினை கோவலன்
முன்னே விரித்து உணவினைப் படைத்து
அடிகளே அமுதும் உண்ணுங்கள்"
(சிலம்பு, கொலைக்களக் காதை) என்ற வரிகள் உணர்த்துகின்றன.

**3. விருந்தோம்பல்** - தமிழர் வாழ்வில், பண்பாட்டில், இல்லறத்தின் ஒரு பகுதியாக 'விருந்தோம்பல்' பண்பு அமைகிறது.

**"செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்**
**நல்விருந்து வானத்தவர்க்கு"** (குறள். 86)

**"மோப்பக் குழையும் அனிச்சம் முகம்திரிந்து**
**நோக்கக் குழையும் விருந்து"** (குறள். 90)

என்ற குறள்கள் விருந்தோம்பலின் பண்பினை, அவசியத்தை வெளிப்படுத்தியுள்ளன.

**"அறப்பரி சாரமும் விருந்து புறந்தரூஉம்**
**பெருந்தண் வாழ்க்கையும்"**
(சிலம்பு 85,86 - மனையறம் படுத்த காதை) என்ற வரிகளின் வாயிலாக, கோவலன் தாய், கோவலன், கண்ணகி இருவரையும் தனி மனையில் அமர்த்தி விருந்தினரை உபசரிக்கும் பண்பை அறிய விரும்புவதாகக் கூறுகிறாள்.

## 4. மக்கட் பேறு

**"அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்**
**சிறுகை அளாவிய கூழ்"** (குறள் 64)

**"ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்**
**சான்றோன் எனக்கேட்ட தாய்"** (குறள் 69)

என்ற குறள்கள் மட்டுமன்றி, 'மக்கட்பேறு' என்னும் அதிகாரத்தில் அதன் சிறப்பினைத் திருவள்ளுவர் எடுத்துரைத்துள்ளார்.

சிலப்பதிகாரத்தில் கோவலனைத் திருமணம் செய்துகொண்ட கண்ணகிக்கு மக்கடபேறு அமையாமல், மாதவிக்கு அமைந்தது என்பதை

**"மாந்தளிர் மேனி மாதவி மடந்தை**
**பால்வாய்க் குழவி பயந்தனள் எடுத்து"**
(சிலம்பு. 22-25) என்ற வரிகள், அடைக் கலக் காதையில் இடம்பெற்றுள்ளன.


மாதவிக்குப் பிறந்த குழந்தையாக இருந்தாலும், தன் பெயரைக் காப்பாற்றப் பிறந்த குழந்தையாகக் கருதி, தன் குலத் தெய்வத்தின் பெயரைக் குழந்தைக்குச் சூட்டி மகிழ்கிறான் கோவலன். இதனை,

**"எம்குலத் தெய்வப்பெயர் ஈங்கு இடுகஎன**
**அணிமே கலையார் ஆயிரம் கணிகையர்**
**மணிமேகலை என வாழ்த்திய ஞான்று"**
(சிலம்பு 37-39 - அடைக்கலம்) என்னும் பாடலடிகள் விளக்குகின்றன.

குழந்தைப் பேறு அற்றவர்களைச் சமுதாயம் 'மலடி' என்று பெண்ணின் மனத்தைப் புணபடுத்துகிறது. ஆணிடம் குறை இருப்பினும், நிறைவாகப் பேசுகிறது சமுதாயம். மாற்றாக, குழந்தைப்பேறு அற்ற ஆணுக்கு மறுமணம் செய்ய த்துடிக்கிறது. பெண்களைத் தண்டிக்கிறது. இன்றைய நவீன அறிவியல் உலகம் மக்கட்பேறு பெறுவதற்கான பல வழிமுறைகளைப் பின்பற்றி வருவதன் மூலம் மக்கட் பேற்றிற்குத் தீர்வு காணமுடிகிறது.

## நிறைவுரை

சங்க காலம் தொடங்கி, இக்காலம் வரையில் சமுதாயம் அமைத்துத் தந்த திருமண முறை, இல்லறம், விருந்தோம்பல், மக்கட்பேறு முதலான வாழ்வியல் நெறி களைப்பின் பற்றி வருவதை இக் கட்டுரை தெளிவாக்கி உள்ளது.



## உளமார வாழ்த்தி உழவரைப் போற்றிடுவோம்!

புத்தாண்டு பிறந்தாச்சு
புதிய பொங்கலும் வந்தாச்சு
கொத்தாக உயிர்குடிக்கும்
கொரோனாவைக் கொல்வதற்கும்
சத்தான தடுப்பூசியிங்கு
சங்கடம் தீர்க்க வந்தாச்சு
இத்திரையில் பூத்திருந்த
இருளதுவும் தொலைஞ்சாச்சு!

இனியென்ன மாந்தர்தம்
இன்னல்கள் தீர்ந்துவிடும்
பனிமீது கதிர்வீழ்ப்பனி
பாங்காக விலகுமாப்போல்
மனிதர்தம் வாழ்வினிலே
மறைந்துவிடும் துயரெல்லாம்
கனிபோல இனிமைதரும் வாழ்வும்
கவலைகளகல மகிழ்ச்சிவரும்!

தைபிறக்க வழிபிறக்கும்
தமிழர்தம் நம்பிக்கை
தைமகளும் பிறந்தாள்
தைரியத்தைத் தந்தாள்
இதை அதை எண்ணிமனம்
இனிமேலும் வருந்தாமல்
பதைபதைப்பைத் துறந்துவிட்டு
பரவசமாய் பொங்கிடுவோம்!

பொங்கலோ பொங்கலென்று



பொறுப்போடு பொங்கலிட்டால்
பொங்குமே வாழ்விலின்பம்
போயகலும் துன்பமெல்லாம்
தூங்கியே பொழுதையெல்லாம்
துணிவின்றிக் கழித்தநாமும்
வாங்கியே கடனென்றாலும்
வழமுறு பொங்கல்வைப்போம்!

உழவர்தம் திருநாளில்
உவப்போடு பொங்கலிட்டு
பழங்களுடன் பசும்கரும்பும்
பகலவனுக்குப் படைத்திங்கு
விளக்கேற்றி வணங்கியே
விரும்பியவை பெற்றிடுவோம்
உளமார வாழ்த்தி நாமும்
உழவரைப் போற்றிடுவோம்

கவிஞர் புரட்சிபாலன்
வன்கூவர்



நான் என்பது
மறைந்தால்,
அந்தக் கணமே
அன்பு
மேலோங்கிவிடும்.

# அமைதிக்கான முகவரி

**Words of Peace**
பிறேம் ராவத் பற்றி மேலும் அறிந்து கொள்ள:
**www.timelesstoday.com**

## முடக்கநிலை 1

மனிதனிடம், உள்வலிமை, தெளிவு இருப்பின் எந்த சூழ்நிலையிலும் நிலை தடுமாறாமல் அவனால் வாழ முடியும்.

உங்கள் கண்களால் எதனை பார்க்க முடியுமோ, அது உங்களுக்கு சொந்த மாகாது. ஆனால், எது உங்களுக்கு உண்மையில் சொந்தமானதோ, அதை உங்கள் கண்களால் பார்க்க இயலாது. இந்த நேரத்தில், கொரோனா வைரசின் தாக்கம், உலகெங்கும் பரவியுள்ளது. இதனால் மக்கள் பல துன்பங்களை அடைகின்றனர். அரசாங்கம் முடக்க நிலைக்குப் போக விரும்புகின்றனர். எந்த நாட்டு மக்களும் முடக்கநிலையை விரும்புவதில்லை.

முடக்கநிலையிலும் மக்கள் அச்சப்படு கின்றனர். வெளியில் போவதற்கும் அச்சம். நாடுகளில் பொருளாதாரம் வீழ்ச்சி அடைந்து கொண்டு போகிறது. ஏதாவது தடுப்பு மருந்து இருக்கிறதா என்று மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

இவ்வாறான சூழ்நிலையின் மத்தியில் உண்மை, தெய்வீகம், ஆனந்தம் என்ப வற்றை எமக்கு தரக்கூடிய ஏதாவது ஒன்று உள்ளதா என்று மனிதன் ஏங்குகின்றான். முகக்கவசம் அணிவது சிரமமாகவும், விருப்பமில்லாததாகவும் இருக்கிறது.

இந்தியாவில் ஜெயின் சமய மக்கள் எப்பொழுதுமே முகக் கவசம் அணிந்து செல்வர். கொரோனா வைரஸ் இல்லாத காலத்திலும் அதை அணிவது அவர் களுக்கு சிரமமாக இருக்கவில்லை. ஜப்பான், தைவான், சீனாவில் காய்ச்சல் வந்தாலும் மக்கள் முகக்கவசம் (மாஸ்க்) அணிவர்.

மக்கள் தங்களிடம் உள்ள செல்வத்தில், தொழில்நுட்ப அறிவில் நம்பிக்கையை வைத்திருந்தனர். தங்கள் தொழில்நுட்ப அறிவினால் எதையும் சாதிக்கலாம் என்று கர்வம் கொண்டிருந்தனர்.

உலகத்தில் நான், யாரோ அப்பலத்தை வைத்தும், நான் எதை உலகத்தில் சாதித்தேன் என்றதை வைத்தும், எனது உடலின் பலத்தைக் கொண்டும் எம்மை நிர்ணயித்தோமே தவிர, எம்மிடமுள்ள நான்காவது பலத்தை நாம் புரிந்து வைக்கவில்லை. எனது ஐரோப்பிய நிகழ்ச்சிகளை, முடித்துக்கொண்டு அமெரிக்கா சென்றேன். நான் விரும்பியும் இந்தியா வரமுடியவில்லை. அமெரிக்காவிலிருந்து இந்தியா போகலாம் என்று அறிந்த பின் இந்தியா சென்றேன். நான் இங்கு இந்தியாவில் இருப்பதனால் எல்லாம் சரியாகிவிடும் என்பதில்லை. என்னால் மக்களுக்கு முக்கியவிடயத்தைப் பற்றி நினைவூட்ட முடியும். அது புதிய விடயம் இல்லை.

தீபாவளி தினத்தின் முக்கியத்துவம் எதுவெனில், இராமர் வனவாசம் முடித்து அயோத்தி வந்த நாளை தீபாவளியாக கொண்டாடுகின்றனர். இக்கொரோனா வைரஸ் பரவல், இராவணனின் பிரச்சினையை விட குறைந்தது இல்லை. பலர் தங்கள் தாய், தந்தை, உடன் பிறந்தவர்களை இந்நோயிற்கு பலி கொடுத்திருக்கின்றனர்.

இவர்களால், அவர்களை நல்லமுறையில் வழியனுப்பி வைக்கக்கூட முடியாமல் போய்விட்டது. தாய், தந்தையர் வைத்திய சாலையில் நோய்வாய்ப்பட்டிருந்தபொழு தும் அவர்களை சென்று பார்க்க முடியாமல் இருந்தது. கொரோனா வைரஸ் என்ற சூறாவளி ஒருமுறை அல்ல, பலமுறை, முழுவருடமும் அடித்துக் கொண்டிருந்தது. எங்கு சென்றாலும் அச்சூறாவளி அங்கு அடித்துக் கொண்டிருந்தது. இதுதான் நிலைமை.

இராமர் போரில் வெற்றிபெற்று சீதையுடன் அயோத்திக்கு வரும்பொழுது, மக்கள் விளக்கேற்றி அவரை வரவேற்கின்றனர். இன்றும் விளக்கேற்றி அந்நாளை தீபாவளியாகக் கொண்டாடுகிறோம். ஒரு மனிதனிடம் உள்வலிமை இருப்பின் ஆபத்தான சூழ்நிலையிலும் அவன் வெற்றியடைய முடியும்.

இராமரின் போர் இலங்கையில் மட்டும் தான் நடந்தது. ஆனால் இக்கொரோனா வைரசுடன் மக்களுக்கு நடக்கும் போர், முழு உலகத்திலும் நடைபெற்றுக் கொண் டிருக்கிறது. இப்பொழுது தைரியமும், உள் வலிமையும் அவசியம். எது உங்களுடை யதோ அதுதான் உங்களுடையது. அத் தைரியம், உள்வலிமை உண்மையில் உங்களுடையது. அதில்தான் உள்வலிமை உருவாகும். பூட்டிய அறைக்குள்ளும் எது உங்களுடையதோ, அதுதான் உங்களு டன் நிற்கும். அத்தைரியம் உங்களுடன் அங்கிருக்கும்.

உங்களுடைய பிரச்சினைகளைக் கொண்டும், நீங்கள் சாதித்த விடயங் களைக் கொண்டும் உங்களை நீங்கள் எடை போடுகிறீர்கள். சமுதாயத்தில் பெரியவர்கள் போன்று நடைபோடுபவர் களுக்கு, தங்களுக்குள் எது இல்லை என்று தெரியும். உலகத்தில் விடயங்கள் தலை கீழாக நடைபெற்றுக்கொண்ருப் பதைப் பார்க்கிறோம். நதிகள் தலைகீழாக ஓடுகிறது. ஆனால் ஒரு நதி மட்டும் நேராகத்தான் ஓடிக் கொண்டே இருக்கிறது. யார் இந்த நதியில் மூழ்கி எழுகிறார்களோ, அவர்கள் காப்பாற்றப்படு வர். இல்லையெனில் கொரோனா வைரஸ் எல்லோரையும் அழித்துவிடும்.

மாதக்கணக்காக வீட்டை விட்டு வெளியே வர முடியாதபொழுது, அதுவே நோய் ஆகிவிடுகிறது. தேக ஆரோக்கியம் இருந்தாலும், நோய் தொற்றினால் முடங்க வேண்டி வரும். என்னுடைய செய்தியி னால் மக்கள் தைரியம் அடைவர் என்பதால் முடக்கநிலை எனும் வீடியோக் களை இந்தியிலும், ஆங்கிலத்திலும் உருவாக்கினேன்.

இது அமைதியைப் பற்றியது மட்டுமல்ல, உள்வலிமை, தைரியம் பற்றியதாகும். எல்லாம் சரியாகிவிடும் என்று நான் கூறத் தேவையில்லை. ஏனென்றால், நல்லசெய்தி என்னவெனில் எல்லாம் சரியாகத்தான் உள்ளது.

இந்த மூச்சு எனும் நதி, இந்த அருள் உங்களின் உள்ளே வந்துபோகும்வரை எல்லாம் சரியாகத்தான் இருக்கும். கொரோனா வைரஸ் வெளியில் இருந்தாலும், உங்களுள் இருக்கும் அமைதியை கவர்ந்து செல்லத்தான் விரும்பும்.

தன்னைத்தான் அறிந்து கொள்வதினால், இந்தப் போரின் மத்தியிலும் நீங்கள் யார் என்பதனை உணர்ந்து கொள்ளலாம். பாரதப்போர் நடப்பதற்குப் பல காரணங்கள் உள்ளன. முக்கிய காரணம் எதுவெனில், காந்தாரி தனது கண்களை துணியால் மூடிக் கட்டி இருந்தாள். அவளால் உண்மையை பார்க்க முடியாமல் இருந்தது. சிறிதளவேனும் உண்மையை கண்டிருந்தால் போரின் பின்னர் அவள் சில உண்மைகளை காண வேண்டிய அவசியம் இல்லாமல் இருந்திருக்கும்.

போரில் அவளது பிள்ளைகள் அனை வரும் கொல்லப்பட்டனர். காந்தாரி பசிக்கு ஒரு பழத்தை பறிப்பதற்காக, கற்களை ஒன்று சேர்த்து அவற்றின் மேல் ஏறினாள். அக்கற்களோ அவளது பிள்ளைகளின் மண்டை ஓடுகளாக இருந்தது. நாடும், சமுதாயமும், நீங்களும், உங்கள் உங்கள் கண்களை மூடிகட்டி வைத்திருக்கிறீர்களா? இந்த மூச்சு எனும் உண்மையை, அறிய, உணர விரும்பாதவர்களாக இருக்கிறீர் களா? அருளினாலும் ஆசீர்வாதத்தாலும் உலகத்தில் உயிர் வாழ்கிறோம்.

இந்த உலகத்தில் உள்ளவற்றை பார்த்து இது என்னுடையது, இது என்னுடையது என்று கூறிக் கொள்கிறோம். உங்கள் கண்களுக்கு எது புலப்படுகிறதோ அது உங்களுடையதல்ல. எது உங்களுடை யதோ, அதைக் காணத் தவறுகிறீர்கள். காந்தாரிபோல் கண்களை மூடிக்கட்டிக் கொண்டு உண்மையைப் பார்க்காமல் இருக்கிறீர்கள். உங்களது உடம்பு உங்களுடையது என எண்ணுகிறீர்கள். இந்த உடம்பும் மண்ணிலானது. மூச்சு இல்லாவிடில் மெது மெதுவாக இவ்வுடம்பும் மண்ணுடன் சேர்ந்துவிடும். அவ்வாறெனில், எது உங்களுடையது? இந்த மூச்சு, இந்த ஆனந்தம், உங்களுக்குள் இருக்கும் இந்தப் பேரானந்தம்தான் உங்களுடையவை.








# ஆழியவளை

தொடர் கட்டுரை

## யாழ்ப்பாணத்துக் கடலோரக் கிராமம் ஒன்றின் மரபும் மாற்றமும்



கந்தசாமி முத்துராஜா

### பாரம்பரியக் கலை இலக்கியங்கள்

### 1. ஆற்றுகைக் கலைகள்

### அ. கூத்து

இவ்வூரில் கூத்து, பாட்டுக்காவடி, பாட்டுச் சமா என்பன மரபுவழி தொடரும் ஆற்றுகைக் கலைகளாகும். தற்போது நாடகங்களும் நடத்துகின்றனர். பூதத்தம்பி, காத்தான், அல்லி அரசாணிமாலை போன்ற கூத்துக்களை பனங்குற்றி, தென்னங்குற்றிகளை நாட்டிக் "கூத்துக் கொட்டகை" அமைத்துப் பெரும்பாலும் சித்திரைக்கு முன்பின்னான மாதங்களில், கோயில் நேர்த்திக்காக ஊர்க்கலைஞர்கள் ஆடுவர். இங்கு 'கூத்து ஆடுதல்' என்று கதைப்பதுதான் வழக்கம். "நாடகம் மதச் சடங்குகள் அடியாகத் தோன்றியது என்பது ஆய்வாளர் முடிவாகும். நாடகம் சமூகக் கூட்டுப் பொதுமையினை ஏற் படுத்துகிறது" (மௌனகுரு, சி: 1994: 76). இக்கூற்றிற்கு அமைவாக, இப்பகுதிகளில் பெரும்பாலும் கோயிலுக்குப் பக்கத்திலே தான் கூத்துக்களை நிகழ்த்துவர்.

தற்போது நடைமுறையிலுள்ள திரை யரங்கு, தொலைக்காட்சிப் பெட்டிகளின் கலை வழங்கலை, அன்று கூத்து ஈடு செய்துள்ளது. ஆண்கள்தான் கூத்தாடு வர். பெண் வேடத்தையும் ஆண்களே ஏற்பர். பெரும்பான்மையான மக்களிடம் நடிக்கும்திறன் 'கொடை மாதிரி' இயல் பாகவே அமைந்துள்ளது. அண்ணாவியா ரின் கடமை நெறிப்படுத்துவது மட்டுமே. மேடை ஏறுவோர் பார்வையாளர் வியக்கும் வண்ணம் திறமையாக நிகழ்த்துவர். இதுபற்றிப் பாலேந்திராவும் பேட்டி ஒன்றில் கூறியுள்ளார், "நான் நடிகர்களின் இயல்பான வெளிப்படையை நெறிப்படுத்து கிறேன். நடிப்பைச் சொல்லிக் கொடுப்ப தில்லை" (காலம்-13, வாழும் தமிழ் சிறப்பிதழ், ஆனி, 2000: 46).

கூத்தில் 'கட்டியகாரன்' 'பபூன்' என்னும் பாத்திரங்கள் முக்கியமாக இடம்பெறும். வில்லுடுப்பு, சிறகுசட்டை, தலைக்கிரீடம் அணிந்து "தாகுதாகுதா; தெய்யோ..தக" என்று வரன்முறையாகக் கால்பதித்து, நாட்டுக்கூத்தைச் சிறந்த முறையில் ஆடுவர். மாலை ஆறு மணிக்குத் தொடங்கும் கூத்து, காலை ஆறு மணிவரை நீண்ட வழமை (நெடிய கதை) தொடர்ந்து நடைபெறும். அயல் கிராமங்களின் மக்களும் இங்கு கூடுவர். கூத்துக் களரியில் சனக்கூட்டம் நிறைந்து காணப்படும். மக்கள், ஒருவகையான தயாரிப்புடன்தான் கூத்துப்பார்க்கச் செல்வர். முற்காலங்களில், தற்காலிகத்



தேனீர்க்கடை போன்ற வசதிகள் இல்லை. எனவே, பலகார உணவு, தண்ணீர், பாய், தலையணை, போர்வை போன்றவற்றை மக்கள் எடுத்துச் சென்று நீட்டிநிமிர்ந்து, படுத்தும், இருந்தும் 'ஆசறுதியாகக்' கூத்துப் பார்த்துத் திரும்புவர். இத்தகைய வழக்கம் வடதமிழக நாட்டாரிடமும் உள்ளது (ஸ்ரீபன், ஞா. 1999: 264). கூத்து, நாடகம், பாட்டுக்காவடிகளைப் பழக்குபவர்களை இவ்வூரில் 'அண்ணாவியார்' என்றே அழைப்பர். கூத்துக்கொட்டகைக்கு வேண்டிய சீன்தட்டி, சுருக்குத்திரை, சுருள்சீன், கம்புதடி, காட்சிப்பொருள் முதலிய 'கலைச் சொத்துக்களை' ஊர்க்கலைஞராகிய மத்தளம் கதிர்காமர் உடைமையாக வைத்திருந்தார். மிருதங்க, ஆர்மோனியக் கலைஞர்களும் ஊரில் உள்ளனர். அயலூர், வெளியூர்க் கலைஞர்களுக்கும் இக்கலைப் பொருட்கள் வாடகைக்கு விடப்படும். அழைக்கப்படும் கலைஞர் களுக்குச் சன்மானம் வழங்கப்படும். இவற்றின்மூலம் இவ்வூரின் இசைக் கலைஞர்களும் கூத்துச்சீன் சோடனைப் பொருட்கள் வைத்திருப்பவரும் அப்போதைக்கப்போது சிறிய வருமானம் பெற்றுக்கொள்வதும் வழக்கம்.

### ஆ. பாட்டுக்காவடி

அண்ணாவியாரின் பாட்டு, அத்துடன் தாளம், ஆர்மோனியம், மிருதங்கம் என்பனவற்றின் இசையுடன் நிகழ்த்துவது 'பாட்டுக்காவடி' எனப்படும். இதற்குச் சில மாதங்கள் ஒத்திகையும் நடைபெறும். பாட்டுக்காவடியில் ஆறு, எட்டு அல்லது பத்து இளைஞர் பங்குகொள்வர். பலநிறப் பட்டுப்புடவையினால் 'தாறு' பாச்சி உடுத்தி, இடுப்புக்கு மேலே உடலெங்கும் சந்தனம் பூசி, உருத்திராட்சம் மாலைகள் அணிவர். கால்களில் சலங்கைக் கொத்தைக் கட்டிக் கொள்வர்.

அண்ணாவியார் 'காப்பு'ப்பாடிக் கடவுள் வணக்கம் செலுத்திய பின்னர் பாற்செம்பு கட்டப்பட்ட காவடிகளைத் தோளிற் சுமந்த வாறு, அண்ணாவியாரின் பாட்டுக்கும் தாளத்துக்கும் பக்கவாத்தியத்திற்கும் ஏற்ப வளைந்து நெளிந்து ஆடுவர். இந்த ஆற்றுகையில் பக்திப்பாடல், திரைப்படப் பாடல்கள்தான் பாடப்படும். இவர்களைச் சூழ்ந்து, மக்கள் வட்டமாகக் குழுமி இருந்து கண்டுகளிப்பர். இதனைக் கோயில் நேர்த்திக்காகவே நிகழ்த்துவர். இந்த ஆட்டத்தின்போது பயன்படுத்தப் படும் காவடி சாதாரண காவடிகளிலும் பார்க்கச் சிறியதாகவும் மயில் இறகு குறைந்ததாகவும் இருக்கும்.

### இ. பாட்டுச்சமா

பாட்டுச்சமா என்பது திருமண வீடு, சாமத்தியத் துடக்குக் கழிப்பு, கோயிலில் திருவிழா இல்லாத நாட்கள் போன்ற சந்தர்ப்பங்களில் நடைபெறும் மகிழ்வு ஊட்டலுக்கான பாடுகை நிகழ்ச்சியாகும். மிருதங்கம், ஆர்மோனியம், புல்லாங் குழல், தாளம் என்பனவற்றை ஊர்க் கலைஞர்கள் வாசிப்பர். அண்ணாவியாரும் ஏனைய குரல்வளம் உள்ளோரும் இனிமையாகப்பாடுவர். ஒலிபெருக்கி அறிமுகமானபின், துடக்கு, வறுமை முதலிய இடர்களினால் நிகழ்ச்சிகளை நேரிற்பார்த்து அனுபவிக்க இயலாதோருக் கும் தமது வளவுகளில் இருந்துகொண்டே இவற்றைக் கேட்டு இன்புறக்கூடிய வாய்ப்புக் கிடைத்தது.

மிருதங்கம் வாசிப்பதில் செல்லையாவும், ஆர்மோனியம் வாசிப்பத்தில் இராசேந்திர மும், புல்லாங்குழல் வாசிப்பதில் வைரவிப் பிள்ளையும் அவர் மகன் கண்டரும் தேர்ச்சியுள்ளவர்களாகத் திகழ்ந்தனர். அண்ணாவி துரைச்சாமி, அண்ணாவி வேலாயுதம்பிள்ளை, நாடக நடிகர் காத்தமுத்து இரத்தினம் இவர்கள் போன்ற இன்னும் பல குரல் வளமுள்ளோர் பாடகர்களாகத் திகழ்ந்தனர்.

கர்நாடக சங்கீதத்தில் ஓரளவுக்குப் 'பாரதி சபாரத்தினம்' தேர்ச்சியுள்ளவராகத் திகழ்ந்தார். இவர் யாழ்ப்பாணத்திலிருந்து வயலின் வாத்தியக்காரரை அழைத்து வெட்டு முருகன், ஐந்து ஆண்பனைப் பிள்ளையார் கோயில்களில் 'சங்கீதக் கச்சேரி' நடத்துவார். ஒருமுறை நயினாதீவு அம்மன்கோவில் தேர்த்திருவிழாக் காலத்தில், கோயிலுக்கு அருகாமையில் அமைந்துள்ள மேடையில், இரவு பத்து மணியளவில் சங்கீதக் கச்சேரி நிகழ்த்தினார். இவரது வறுமை நிலை காரணமாக, முழுத்திறமையும் வெளி வராமல் போய்விட்டது போலும்.

### 2. நாட்டார் இலக்கியங்கள்

நாட்டார் இலக்கியம் கிராமியத்தின் தன்மையைப் படம் பிடித்துக் காட்டுவ தாகும். இதுபற்றி இ. பாலசுந்தரம் கூறுவது நோக்கத்தக்கது:

"ஒரு பிரதேச மக்களது சமுதாய மரபுகள், நம்பிக்கைகள் என்பனபற்றி ஆராய்வதற்கு அப்பிரதேச மக்களின் நாட்டார் பாடல்கள் தக்க சான்றுகளாக அமைகின்றன. இப் பாடல்கள் மனித வாழ்க்கையிற் பயன்பாடு உடையனவாகத் திகழ்வதால் அவை மக்களது வாழ்க்கை முறைமையைப் பற்றிய முழுமையான தகவல்களைக் கொண்டியங்குகின்றன" (1979: 02).

"இலக்கியம் என்பது தான் தோன்றுகின்ற சமூகத்தின் வரலாற்றுடன் இணைந்தது" (சிவத்தம்பி, கா. 11983:07). வாய்மொழி இலக்கியம் கிராமத்தினரின் உழைப்போடும் அன்றாட வாழ்வோடும் இணைந்துள்ளது. இயற்றியோர் பெயர் தெரியாது. கூட்டு முயற்சியின் அறுவடையாக வெளிப்படு வது. இந்த வாய்மொழிப் பாடல்கள் ஒவ்வொன்றிற்கும் தனித்தன்மையான




பண்புகள் உண்டு. நடையியல் கூறுகளும் வெளிப்பாட்டுக் கூறுகளும் பண்பாட்டுக்குப் பண்பாடு வேறுபடும். வாய்மொழி இலக் கியங்களுக்கூடாக அவர்களது பண்பாடும் சமூகப் பின்னணியும் துலங்கும்.

"வாய்மொழி இலக்கியங்களே நாட்டார் இலக்கியங்களாகும். நாட்டார் இலக்கியம் மக்களிடையே மக்களால் மக்களுக்காகப் பாடப்படும் ஒன்றாகும். குறிப்பிட்டதொரு சமூகச் சூழலில் இந்த இலக்கியங்களை மக்களே பாடுகின்றனர். இது அன்றாட வாழ்வோடு தொடர்புடையது" (தே. லூர்து 2000: 87). ஆழியவளை மக்களிடையே விளங்கும் வாய்மொழி இலக்கியங்கள் அவர்களின் பண்பாடு, வரலாறு, உளவியல் போன்றவற்றைச் சொல் கின்றன. அவர்களின் வாழ்வியலை' எழுத்தின்றி ஆவணப்படுத்துகின்றன.

இவ்வூரின் வாய்மொழி இலக்கியங்களாகப் பழமொழி, நொடி கரைவலை அம்பா, கும்மிப்பாடல், கோலாட்டப் பாடல், சாமத்திய ஆலாத்துப்பா, கல்யாண ஆலாத்துப்பா, ஒப்பாரிப்பாடல் முதலிய வற்றைச் சொல்லலாம். இவற்றுள் பழமொழி, நொடி, கரைவலை அம்பா என்பன பற்றிச் சிறிதளவு விபரிக்கப்பட்டுள்ளது.

தொடரும்...)

## தைப்பொங்கல்



செந்தமிழில் பாட்டுப்பாடிட தைத்திருமகளே வருக! புத்தாண்டே வருக!

செந்தமிழில் பாட்டுப்பாடி தைப்பொங்கல் பொங்கிடுவோம்
தைத்திருமகளே வருக புத்தாண்டே வருக இன்பவாழ்வைத் தருகவே (செந்தமிழில்)

உழவர் பெருமக்கள் நன்றிசொல்லும் சூரியப்பொங்கல்
கண்கண்ட தெய்வமே கதிரவனே நல்வாழ்வைத் தருபவனே (செந்தமிழில்)

எங்கள் நிலைபற்றி மனம்நொந்து கூறுகின்றேன்
தமிழ்ஈழ மண்ணையன்று தமிழனே ஆண்டானே
நின்மதியாய் முன்னோர் நிமிர்ந்து நின்றனரே
இயற்கை வளங்களை பேணிக் காத்தனரே
ஊர்கூடி உண்டனர் மகிழ்ச்சியாக வாழ்ந்தனரே
தமிழ்ஈழம் எங்கும் தைப்பொங்கல் பொங்கி
சூரியனை நன்றியுடன் வணங்கிப் போற்றுவார் (செந்தமிழில்)

- அப்பையா சண்முகராசா

# மூக்குத்தி அம்மன் - திரைவிமர்சனம்



ஆரணி. ஞா

2020 தீபாவளி அன்று நயன்தாரா மற்றும் RJ பாலாஜி நடித்த இப்படம் வெளியானது. மே 2020இல் வெளியிடப்பட வேண்டிய இப்படம் கோவிட்-19 தொற்று நோய்ப் பரவலால் நேரடியாக இணையத்தள சேவையான Disney+Hotstarஇல் வெளியிடப்பட்டது.

Engels (RJ பாலாஜி), மூன்று சகோதரிகள், தாய், மற்றும் தாத்தாவுடன் ஒரு வீட்டில் வாழ்கிறார். தந்தையும் இல்லாமல், பண வசதி குறைந்த குடும்பத்தில் அவர்கள் இருக்கின்றபடியால் Engelsஐ ஒருவரும் திருமணம் செய்ய முன்வரவில்லை. அவர்களது குடும்ப நிலையை சிறப்பாக்க Engelsஇன் தாய் (ஊர்வசி) அனைவருடனும் திருப்பதிக்குச் செல்ல விரும்புகிறார். ஆனால் ஒவ்வொரு முறையும் திருப்பதி செல்ல ஒரு தடை ஏற்படுகிறது.

இதே நேரம் Engels மூக்குத்தி அம்மனின் படங்களையும் பெயரையும் பல இடங்களில் காணத் தொடங்குகிறார். ஒருவர் அவரது தாயிடம் மூக்குத்தி அம்மனைத் தரிசிக்க வேண்டும் என்று சொல்லும்போது Engelsஉம் குடும்பத்துடன் சேர்ந்து மூக்குத்தி அம்மன் கோவிலுக்குச் செல்கிறார்.

சிறிய, பழுதடைந்த மூக்குத்தி அம்மனின் கோயிலுக்குச் செல்லும் Engelsஇன் குடும்பமும் அங்கு அம்மனை வணங்குகின்றனர். அதில் Engels அவரது கஷ்டங்களைச் சொல்லி வணங்குகிறார். அன்று இரவு அங்கேயே அவர்கள் குடும்பத்துடன் தங்குகின்றனர். Engels தூக்கத்தில் இருக்கும்போது அவர் முன் மூக்குத்தி



அம்மன் (நயன்தாரா) தோன்றுகிறார். Engels அவரிடம் தனது ஆசைகளைத் தெரிவிக்கிறார். இவற்றை வழங்க, அம்மன் அதற்கு பதிலாகத் தனது ஆசைகளை Engels நிறைவு செய்ய வேண்டும் என்று சொல்லுகிறார். அம்மனின் ஆசைகள் என்னவென்றும் அவற்றை Engels நிறைவேற்றுவாரா என்றும் படத்தைப் பார்த்து அறியுங்கள்.

இப்படத்தில் Engelsஇன் குடும்பப் பிரச்சினைகளுடன் ஆன்மீகத்தைச் சாட்டாகப் பயன்படுத்தி பிரபலமாகிய ஒருவரும் பிரச்சினையாக அமைகிறார். இப்படத்தில் பல்வேறு கருத்துக்கள் கூறப்பட்டு இருக்கின்றன.

பள்ளிக்குச் செல்லாமல் குடும்பப் பொறுப்பை ஏற்று வீட்டு வேலைகளைச் செய்யும் அக்கா, கணவரைத் தேடும் அம்மா போன்ற கதாபாத்திரங்களுடனான Engelsஇன் உறவும், அவற்றை எவ்வாறு அம்மனின் அறிவுரையால் Engels மாற்றுகிறார் எனவும் காட்டப்படுகிறது. குறிப்பாக Engelsஇன் அம்மா ஒரு சிறந்த கதாபாத்திரமாகக் காட்டப்படுகிறது. படத்தின் இறுதியில் அவர் எவ்வாறு அவரது கணவரது பிரச்சினையைத் தீர்க்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.



இவற்றுடன் நயன்தாரா அம்மனாக சிறப்பாக நடித்துள்ளார். பெண்களை முக்கிய கதாபாத்திரங்களாகக் கொண்ட மற்றப் படங்களைப் போல பெண்களை வல்லுறவுக்கு ஆளாக்கி அதை தீரத்துடன் பழிவாங்கும் கதாநாயகியைப் போல் அல்லாமல் இதில் அம்மனாகக் காட்டியது நன்றாக இருந்தது. பிற பெண்கள் சிறு கதாபாத்திரங்களாக இருந்தாலும் அவர்களைச் சந்தோஷமாகக் காட்டியதும் குறிப்பிடத்தக்கது. இது Engelsஐ பிரதம





கதாபாத்திரமாகக் கொண்ட படம் என வாசகர்கள் அறியவேண்டும். ஆனால் அவருக்கு இல்லாமல் மூக்குத்தி அம்மனுக்கு ஒரு பொருத்தமான சண்டைக் காட்சி அளித்ததும் குறிப்பிடத்தக்கது.

கடவுளை நாம் எவ்வாறு அணுகவேண்டும் என இப்படம் காட்டுகிறது. கடவுளைப் பயத்தாலோ அல்லது எல்லோரும் செய்வதைத் தாமும் செய்வதாலேயோ அடையமுடியாது. உண்மையான பக்தியுடன் அல்லது நட்புடன் அணுக வேண்டும் என Engels மூலமாகவும் அம்மன் மூலமாகவும் இதில் காட்டப்படுகி றது. அம்மனும் இப்படத்தில் போலிச் சாமியார்களாக இருப்போர் தங்களால்தான் கடவுளை நெருங்க முடியும் என்று கூறுவது தவறு என்கிறார். அவர்களுடன் பேசக்கூடிய கடவுள் அனைவருடனும் பேசுவார் என்றும், இதனால் நேரடியாகக் கடவுளிடம் ஒருத்தர் தங்கள் பிரச்சனைகளைக் கூற வேண்டும் என்றும் கூறுகிறார். கடவுளை நம்புபவர்களும், நம்பாதவர்களும் பார்க்கக்கூடிய படம் இது.

பார்க்கிறவன்,
பார்க்கப்படுவதிலிருந்து
மாறுபட்டவன்.



















# MORTGAGE SOLUTIONS

## SAVE UPTO 75% REFINANCE

## MONTHLY SAVING $2,409

| | | Before | After |
|---|---|---|---|
| Mortgage Payment | $320,000 @ 2.90% | $1,498.02 | - |
| Auto Loan | $21,000 @ 7.50% | $764.25 | $0.00 |
| Line of Credit - 1 | $16,000 @ 6.50% | $566.67 | $0.00 |
| Line of Credit -2 | $12,500 @ 7.00% | $447.92 | $0.00 |
| Credit Card -1 | $ 8,800 @12.00% | $352.00 | $0.00 |
| Credit Card - 2 | $ 5,200 @ 19.00% | $238.34 | $0.00 |
| Store Card | $ 3,000 @ 24.00% | $150.00 | $0.00 |
| New Mortgage | $386,500 @ 2.9% | | $1,605.00 |
| Total Debt | | $ 386,500.00 | $ 386,500.00 |
| Total Payment | | $4,014.20 | $1,524.55 |



**KIRUBA THANABALASINGHAM**

Mortgage Agent Lic# M12002440

info@mortgagesolutions.ca

www.MortgageSolutions.ca

Ultimate Mortgage and Finance Solutions Inc. Lic#11995

## Prime + 1% Lower Rate

## $50,000 EQUITY LOAN

## GET APPROVED WITHIN 24 HOURS

# 416.298.2777

# $375 Mo.

## MARKHAM & STEELES - BLUE BUILDING

B105 - 3341 Markham Road, Toronto, ON M1X 0A5